தென்றல்

ஆசிரியர்:— கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை 8—10—55 சனிக்கிழமை | இதழ் 17

சொல்லில் அடங்காச் சுவைக்கனி!

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. 61

பெறத் தகுந்த பேறுகளில் அறிய வேண்டியவைகளை அறியும் நன்மக்களைப் பெறுவதைத் தவிர, மற்றப் பேறுகளை யாம் மதிப்பதில்லை.

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ். 64

தம்முடைய மக்களின் சிறு கைகளால் அளாவப் பெற்ற உணவு பெற்றோர்க்கு அமிழ்தத்தைவிட மிக்க இனிமை உடையதாகும்.

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம்செவிக்கு. 65

மக்களின் உடம்பைத் தொடுதல் உடம்பிற்கு இன்பம் தருவதாகும்; அம்மக்களின் மழலைச் சொற்களைக் கேட்டல் செவிக்கு இன்பம் தருவதாகும்.

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். 66

தம் மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு அதன் இனிமையை நுகராதவரே, குழலின் இசை இனியது யாழின் இசை இனியது என்று கூறுவர்.

தம்மின்தம் மக்கள் [illegible] மாநிலத்து
மன்னுயிர்க் [illegible] இனிது. [illegible]

தம் [illegible] அறிவுடைமை தமக்கு [illegible] உலகத்து [illegible] மிகுந்த இன்பம் பயப்பதாகும்.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். [illegible]

தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்து உற்ற மகிழ்ச்சியைவிடப் பேரிதும் மகிழ்வாள்.

—[illegible]

◉

—புகைப்படம்: செம்பு ஸ்டுடியோ, சிதம்பரம்.

★ ஆட்சிமொழி-ஓர் ஆராய்ச்சி! ★

டி. கே. சேதுராம், எம். ஏ.

"எந்த மொழியை எத்தனை சதவிகிதத்தில் மக்கள் பேசுகிறார்கள் என்று கணக்கிட்டு, அதிக சதவிகிதமுள்ள மொழியை நாட்டு மொழியாக்கவோ, அல்லது ஆட்சிக்குரிய மொழியாக்கவோ செய்வது புரட்சிக்குக் கால்கோளிடுதலாகும் என்பதை வெளிநாட்டார் உணர்ந்தார்கள். ஆனால் இங்கு......?"

"ஆங்கிலம் அயல் நாட்டு மொழி. மேலும், ஆங்கிலம் தெரிந்தவர்கள் மிகமிகக் குறைவு. இந்தி நம் 'நாட்டு மொழி' (National Language) நம் நாட்டிலேயே பிறந்து, வளர்ந்த இந்தி மொழி நம் கலாச்சாரத்திற்கு ஏற்பது மேலும் விரைவில் வளரும். வளரச் செய்ய வேண்டும். இந்தி தெரியாதவர்கள் இந்தியைக் கற்றுக் கொள்ள வேண்டும். நாட்டின் நன்மையைக் கொண்டு அவர்கள் மிகவும் முயற்சி செய்து விரைவில் இந்தியைக் கற்றுக் கொள்ள வேண்டும். வீண் எதிர்ப்புக்கூடாது."

ஆட்சியாளர்கள் ஒவ்வொரு நாளும், இடைவிடாமல் இவ்வாறு கூறுவதை நாம் பார்க்கிறோம். இவர்கள் கூற்றில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதை ஆராய்வோம்.

இந்தியா ஒரு பெரிய நாடு; கண்டம் என்றே கூறலாம். வெவ்வேறு மக்கள், வெவ்வேறு நிலைகளில் அநேக நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்த நாடு. ஒற்றுமையாக ஒன்று கூடி வாழ்ந்த நாளே கிடையாது என்று கூறலாம். உதாரணமாக, தமிழ் மூவேந்தர்கள் எப்படி வாழ்ந்தனர் என்பதை எடுத்துக் காட்டாகக் கூறலாம். ஆங்கிலேயர்கள் அரசாண்ட பின்பு தான் இந்தியாவில் அரசாங்க இணைப்பு (Administrative unity) ஏற்பட்டது. இது சரித்திர சம்பந்தமான உண்மை. கற்பனையல்ல. அரசாங்க இணைப்பை ஆங்கிலேயர்கள் தாங்கள் ஆண்ட காலத்தில் பலப்படுத்தி வந்தனர். நீடித்து நிலைக்கக் கூடிய அரசாங்க அமைப்பைச் சுதந்தர இந்தியாவிற்கு வெகுமதியாக அளித்து ஆட்சியினின்று விலகினர். இந்தியாவிற்கு ஆங்கிலேயர்கள் செய்த பல நன்மைகளில் இதுவும் ஒன்று. [illegible] யாத நன்மையாகும். அவர்கள் அரசாண்ட காலத்தில் ஆங்கிலத்தை அரசாங்க மொழியாக்கினர். இரண்டு நூறு ஆண்டுகளாக ஆங்கிலம் இந்திய மண்ணில் செழித்து வளர்ந்தது, வளர்ந்து கொண்டிருக்கிறது. மக்கள் தங்கள் தங்கள் மொழிகளில் [illegible] ஆட்சியை நடத்தினர். வேறு வகையில் கூறலாம். பஞ்சாயத்து போன்ற இடங்களில் மக்கள் தங்கள் மொழிகளின்—மூலம் ஆட்சி நடத்தினர். பஞ்சாயத்தில் நடக்கும் விஷயங்கள், அவசியமாயின் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மேல் சர்க்காருக்கு அனுப்பப்பட்டது. அதற்குத் தகுந்த பன்மொழியாளர்களை அரசாங்கம் அங்கங்கே நியமித்தது. உயர்ந்த அதிகாரிகள் தங்கள் தாய் மொழியற்ற மற்ற மொழியொன்றைக் கற்கவேண்டும். இதில் பலாத்காரம் கிடையாது. இவ்விதமாக ஆட்சி நடந்தது. நடந்தும் வருகிறது.

இந்நிலையை மாற்ற விரும்புகிறார்கள். ஆங்கிலத்தை ஒழித்து இந்தியை அதனிடத்தில் புகுத்த முயலுகிறார்கள். அதற்காகப் பதினைந்து வருட காலம் கொடுத்துள்ளனர். அதற்குள் பல்வேறு வகையில் இந்தியை, இந்தி தெரியாத இடத்தில் திணிக்க முயலுகிறார்கள். இது நன்மை பயக்குமா என்று ஒரு சிறிதும் யோசித்துப் பார்க்கவில்லை நம் ஆட்சியாளர்கள்.

ஆங்கிலம் அயல்நாட்டு மொழியாம். உண்மை தான். ஆனால், ஒவ்வொரு மனிதனுக்கும் தனக்குத் தெரியாத மொழி தாய் மொழியாக இருந்தாலும் அம்மொழி அயல் மொழியாகும். மொழியின் உபயோகம் கருத்தை மக்களிடம் பரப்புதலாகும் தெரிந்த மொழியில் இருவர் பேசினால் அவர்கள் எந்நாட்டவராயினும், எக்குலத்தவராயினும் அவர்களிடையே ஒரு பழக்கம் வெகு விரைவில் ஏற்படும். வேற்று மொழியினர் ஒரே இடத்தில் பல நாட்களாக இருந்தாலும், கருத்துக்கள் பரவுவதற்கு வழியின்மையால், அவர்கள் அயலார் போன்று வாழ்ந்து வருதலை நாம் பார்க்கிறோம். ஆதலால், அயல் மொழியென்பது ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பைக் காட்டக்கூடியதல்ல; தெரியாத மொழிகளெல்லாம் அயல் மொழிகள் தாம். ஒரு மொழியின் எல்லை ஒரு நாட்டின் எல்லையைப் பொருத்ததல்ல.

இந்தி 'நாட்டு மொழி' என்று கூறுகிறார்கள். இது உண்மையல்ல. நாட்டு மொழி யென்றால் நாட்டு மக்களெல்லாம் குழந்தைப் பருவ முதல் பேசும் மொழியாம். இந்தியாவில் அவ்விதமாகப் பல மொழிகள் உள்ளன. அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூட, (constitution) இந்தி, நாட்டு மொழியென்று கூறப்படவில்லை. இந்தி ஆட்சிக்குரிய மொழி என்றுதான் எழுதப்பட்டுள்ளது. இவ்விரண்டிற்கும் அடிப்படை வேற்றுமை உண்டு என்பதை மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டும்.

பல மொழிகள் கலந்துள்ள நாடுகளில் பெரும்பான்மையாக எல்லா மொழிகளையும் ஆட்சிக்குரிய மொழியாக வைத்துக்கொள்கிறார்கள். சுவிட்சர்லாந்து மக்களில் 72 சதவீதம் ஜெர்மன் மொழியும், 21 சதவீதம் பிரெஞ்சு மொழியும், 6 சதவீதம் இத்தாலிய மொழியும், 1 சதவீதம் ரோமன்சு மொழியும் பேசுகிறார்கள். அங்கு ஆட்சிக்குரிய மொழிகள் ஜெர்மனி, பிரெஞ்சு, இத்தாலிய மொழிகளாகும். பெல்ஜிய மக்கள் பிரெஞ்சு கலந்த மொழியொன்றையும், டச்சு கலந்த மொழியொன்றையும் பேசுகிறார்கள். அங்கு ஆட்சிக்குரிய மொழிகள் இத்தாலியும், பிரெஞ்சுமாகும். கனடாவில் ஆங்கிலமும் பிரெஞ்சும் ஆட்சிக்குரிய மொழிகளாக உள்ளன. இந்நாடுகளில் எந்த மொழியை எத்தனை சதவிகிதத்தில் மக்கள் பேசுகிறார்கள் என்று கணக்கிட்டு, அதிக சதவிகிதமுள்ள மொழியை 'நாட்டு மொழியாகவோ' அல்லது 'ஆட்சிக்குரிய மொழியாகவோ' அவர்கள் வைக்கவில்லை. அவ்வாறு செய்வது புரட்சிக்குக் கால்கோளிடுதலாகும் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர். ஆனால் நம்மவர்கள் அதனை உணரவில்லை. இந்தியாவில் பேசப்படும் எல்லா மொழிகளையும் ஆட்சிக்குரிய மொழிகளாக்க வேண்டும் என்று கூறவில்லை. இல்லாதவற்றை இருப்பதாகக் கூறவேண்டாம் என்று சொல்லுகிறோம். நாட்டு மொழி அல்லாததை நாட்டு மொழியென்று கூறுவதால் நாட்டு மொழியாகாது.

'இந்தி' இந்தோ-ஆரிய மொழி இனத்தைச் சார்ந்தது. இம்மொழியினம் இந்திய மண்ணிற்குப் புறம்பட்டதாகும். மத்திய ஆசியாவிலிருந்து வந்த மொழி இனமாகும். இக்கூற்று உண்மை எனின், எப்படி ஆங்கிலம் அயல் நாட்டு மொழியாகுமோ, அப்படியே இந்தியும் அயல்நாட்டு மொழியாகும். கால அட்டவணையில் இந்தோ - ஆரிய மொழியினம் முதலிடத்தையும், ஆங்கிலம் இறுதி இடத்தையும் பெற்றுள்ளன. வேறு வித்தியாசம் கிடையாது. இதை உணர்வது இன்றியமையாததாகும்!

ஒரு மொழி இந்தியாவில் நான்கு தேவைக்குப் பயன்படவேண்டும். 1. மாகாணத் தேவைக்குப் பயன்படுவது. 2. மற்ற மாகாணங்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளப் பயன்படுவது. 3. உலகத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ளப் பயன்படுவது. 4. வளரும் மன்பதையின் அறிவுடன் தொடர்பு வைத்துக்கொள்ளப் பயன்படுவது.

மாகாணத் தேவைக்கு வெவ்வேறு மொழிகள் உள்ளன. வங்கத்தில் வங்க மொழியும், தமிழ் நாட்டில் தமிழும், தெலுங்கு நாட்டில் தெலுங்கும் உள்ளன. மற்ற மூன்று தேவைக்கு இந்தியாவில் உதவும் மொழி ஆங்கிலமாகும். இந்தியல்ல. இது சரித்திரத்தின் காரணமாக ஏற்பட்ட விளைவு: யாருடைய குற்றமுமல்ல. சரித்திரத்தின் காரணமாக ஏற்பட்ட விளைவு, நன்மை பயக்குமானால், மாற்றலாம். இல்லையெனின் மாற்றுவது அறிவுடைமையாகாது. ஆட்சியாளர் இதனை உணரவேண்டும். ஆங்கிலத்தை ஆட்சிக்குரிய மொழியாக வைத்துக்கொள்வது தான் சிறந்ததாகும்.

★ ★ ★ ★ ★

ஐயோ, தமிழே!

ருசியக் கூட்டாட்சி புரட்சிக்குப்பின் மலர்ந்தது. ஜார் மன்னன் 'சடசடெனச்' சரிந்தான். புதிய ஆட்சியிலே எல்லாக் குடியரசுகளும் சமமாக நடத்தப்படுகின்றன. ருசிய மொழியைப் பிற மொழியாளர்கள் படிக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தவில்லை; விரும்புவோர் படிக்கலாம். அந்த அந்தக் குடியரசில் அந்த அந்த மொழியே ஆட்சி செய்கின்றன. எடுத்துக்காட்டாக உக்கிரேன் குடியரசு ருசியக் குடியரசுக்கு அடுத்த-இரண்டாவது பெரிய குடியரசாகும். தனது மொழியிலே இக்குடியரசு நூற்றுக்கணக்கான செய்தித்தாட்களையும், ஆண்டொன்றுக்கு ஆயிரக்கணக்கான நூல்களையும் வெளியிட்டுவருகிறது. இதற்குத் தனித் தன்மை வாய்ந்த நடனமும், இசையும் உள்ளன. எஞ்சல்ஸ் என்பது செருமானியர் வாழும் மற்றொரு நகரம். இது ருசியத்துணைக் குடியரசு ஒன்றின் தலைநகரம். இங்கு ஆட்சி, கல்வி, கலை யாவும் செருமன் மொழியிலேயே நடைபெறுகின்றன. செருமானியம் கண்டு பொறாமைப்படுமளவு இங்கே செருமன் மொழியும் கலையும் வளர்க்கப்படுகின்றன. 'பெய்க்கால்' ஏரியின் வடகரையில் உள்ள 'புரியட்டுமங்கோலிய'க் குடியரசு என்பது மிகச் சிறிய பகுதி. இவர்களுக்குத் தனி மொழிகூட இல்லாமலிருந்தது. இப்போது ருசிய அரசாங்கத்தாரால் லத்தீன் எழுத்துக்கள் போதிக்கப்பட்டு புதிய மொழி யொன்று இவர்களுக்கு ஏற்றவகையில் ஆக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் இந்தியாவைத் திரும்பிப்பாருங்கள். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தமிழ் மொழி பெயர்ப்புப் பிரதி தமக்கு வேண்டுமென்று மதுரைத் திருவள்ளுவர் கழகத் தலைவர் அதற்குரிய தொகையை அனுப்பிவைத்தாராம். அவருக்கு இந்திய அரசாங்கத்தார் இந்தி எழுத்துக்களில் எழுதப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்பொன்று அனுப்பியுள்ளனர். அதாவது எழுத்துக்கள் அனைத்தும் இந்தி-தேவநாகரி எழுத்துக்கள்; சொற்களெல்லாம் தமிழ்! எழுத்துக்களை உலகிற்குக் காரணகாரிய விளக்கத்தோடு உதவிய தமிழ்-வடமொழியனைய பிறமொழிகளும்கூட எழுத்தற்றன வாய் வாயளவிலே ஒலிக்கப்பட்டு வாழ்ந்த காலத்திலும் எழுதப்பட்ட இலக்கிய இலக்கணம் பெற்று விளங்கிய தமிழன் எழுத்து முறையை அழிப்பதற்கு இந்திய அரசாங்கம் துணிந்து விட்டது என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்.

—தமிழண்ணல்.

★ ★ ★ ★ ★

எண்ணம்

புகழேந்தியின் பவனி !

புகழேந்தி வந்தார்—பெரியார், தேசியக்கொடியை எரிப்பேன் என அறிவித்து ஓய்ந்த நேரத்தில்—மக்கள் பிரச்சினையைப்பற்றி சிறிதும் கவலைப்படாத கம்யூனிஸ்டுகள்கூட, மொழிப் பிரச்சினையில் தலையிட்டு இந்தியை எதிர்த்திருக்கும் நேரத்தில், திராவிடநாடு பிரச்சினை குறித்து பண்டிதர் என்னோடு வாதாடிப் பார்க்கட்டும் என்று தென்னாட்டுத் தலைவர் அறிஞர் அண்ணா அறைகூவல் விடுத்திருந்த நேரத்தில் புகழேந்தி சென்னைக்கு வந்தார்—ஆம் ; பிறநாட்டினரின் புகழ்மொழிகளையும், வரவேற்பையும் தாங்கித் தாங்கிப் பூரித்திருக்கும் பண்டித நேரு சென்னைக்கு வந்தார். ஊசிமுனையளவு உள்ளத்தில் கிறல் பட்டாலும், சுடுசொல்லை வீசியெறியும் பண்பாளர் வந்தநேரம் சென்னை இலட்சியக் கனலில் பழுத்து பலமாகி இருந்த நேரம். ஆனாலும் அந்தக் கோபக்காரக் கோமான் கோட்டைத் தளத்திலே சொன்னது என்ன ? ''சென்னை எனக்கு சாந்தியளிக்கிறது ; நாகரிகமுள்ள இந்த சென்னைக்கு வருவதாலே என் உள்ளம் குளிர்ச்சியடைகிறது'' நேரு இப்படிப் பேசுவார் என்று மாற்றுக் கட்சிக்காரர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் ; ஏன், காங்கிரஸ் தலைவர்களே நேரு இப்படிப் பேசுவார் என்று நினைத்திருக்க மாட்டார்கள். எதிர்தரப்பாரின் கிளர்ச்சியினால், ஆட்சிபீடம் ஆட்டம் கொடுக்க ஆரம்பித்துவிட்டால், உடனே நேருவை பவனிவரச்செய்து, பொது மக்களின் கவனத்தைத் தன் பக்கம் இழுக்கும் பழக்கம் பெற்ற சென்னை சர்க்கார், நேருவின் வாயிலிருந்து எதிரிகளின்மீது தொடுக்கும் கூர்வேல்களைத் தானே அவர்கள் எதிர்பார்த்திருப்பார்கள் ! அவர்களே ஏமாந்திருக்கிறார்கள். ''ஐயகோ, நேரு அணைத்துப் பேசுகிறாரே, அதட்டுவார் என்றல்லவா நினைத்தோம்'' எனப் பெருமூச்சு விட்டிருக்கிறார்கள். தட்டிக் கேட்போர் விந்தையுற—தாழ்பணிந்து கிடப்போர் கவலையுற—நேரு ஏன் அவ்வாறு நடந்து கொண்டார் ? இரண்டாண்டுகளுக்குமுன் 'காட்டுமிராண்டி'கள் என்று தென்னாட்டாரை ஏசிவிட்டுப் போன நேரு, இப்போது நாகரிகமுள்ள சென்னை என்று சொல்வதன் மர்மம் என்ன ? இன்றைய சென்னையோ, 'காட்டுமிராண்டிகள்' என்று சொன்னபோது இருந்ததைக் காட்டிலும் சிவப்படைந்திருக்கும் சென்னை. வரவேற்போ, புல்கானினைச் சந்தித்து வந்த பிரதமர் நேருவுக்கு, சாதாரண பிரதமர் நேருவுக்கு அன்று அளித்த வரவேற்பைக் காட்டிலும் சிறப்பிலும், ('நேரு ரஷ்யவிஜயம்'—படத்திற்கு இருந்த ஆதரவுக் கூட்டத்தைக் காட்டிலும் மிகக் குறைவு) சிங்காரத்திலும் மிகக் குறைவு.—ஆனாலும் நேரு சென்னையைப் புகழ்ந்திருக்கிறார். நாகரிகமுள்ள சென்னை, பண்பாடுள்ள சென்னை என்று வர்ணித்திருக்கிறார். பைந்தமிழ் மொழியினருக்கு, பண்பாடுள்ள தனியாட்சி வேண்டுமென்று துடிப்போருக்கு, பண்டிதரின் வரவும், பவனியும் அவர் தம் பேச்சின் உட்பொருளும் புரியாமலல்ல ; தெளிவாகப் புரிகிறது !

பண்டித நேருவுக்குத் தென்னாட்டில் பலத்த எதிர்ப்பிருப்பது இந்தத் துணைக்கண்டம் நன்கறிந்த ரகசியம். ஆனால் நேருவின் இந்தப் பயணத்தின்மூலம் அவருக்கு வடநாட்டிலும் பலத்த எதிர்ப்பு இருக்கிறது என்பதை நேருவே தெளிவாக விளக்கிவிட்டார். வடநாடு முரட்டுத்தனம் கொண்ட, நிதானம் இல்லாத நாடு என்றும் அங்கே, காங்கிரஸ் ஆட்சிக்கு எதிரான குழப்பமும், எதிர்ப்பு ஆட்டங்களும் மாணவர்களால் நடத்தப்படுவதாகவும் தனது பேச்சிலே தெரிவித்திருக்கிறார். இதனால், இங்கு மட்டுமல்ல வடநாட்டிலும் பண்டித நேருவுக்கு பலத்த எதிர்ப்பிருப்பது புலனாகிறது. நாடெங்கும் எதிர்ப்பிருந்தும், மோதிலால் மைந்தர் மோகனமான சொற்களைக் கையாண்டிருக்கிறாரே சென்னையில், என விந்தையாகத்தானிருக்கும். உணர்ந்து ஊமையாக இருக்கவேண்டிய நேரத்திலே சீற்றம் கொள்ளும் சுபாவத்தினர், நெஞ்சு வேகவேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கும்போது உருக்கமாகப் பேசுவானேன் என்று யாரும் திகைக்கத்தான் செய்வர்.

''அண்மையில் வெளிநாடுகளிலிருந்து பிரமுகர்கள் வர இருக்கிறார்கள். இந்தியாவுக்கு வருபவர்கள் சென்னைக்கு வராவிட்டால் இந்தியாவை அவர்கள் சரியாகப் பார்த்ததாகாது. அவர்களைத் தகுந்த முறையில் வரவேற்பீர்களென நம்புகிறேன்'' இது நேருவின் வாய்மொழி.

வரவிருக்கும் பிரமுகர்கள் யார் ? குறிப்பிட்டுச் சொல்லாமல் அதை ஏன் பொதுப்படையாகக் குறிப்பிட வேண்டும்! ''நான் வெளிநாடு சென்றபோது, எனக்களித்த வரவேற்பு, எனக்காக அல்ல, இந்தியாவுக்காக'' என்று நேரு பொதுக்கூட்டத்தில் ரஷ்யநாட்டு வரவேற்பைக் குறிப்பிட்டார், அந்த வரவேற்பை நடத்திய ரஷ்யநாட்டுத் தலைவர் புல்கானின் இங்கு வரவிருக்கிறார் என்பதைத்தான் நேரு மறைமுகமாகக் குறிப்பிட்டார். அவ்வளவு சீரும், சிறப்புமாக வரவேற்பு நடத்திய பொதுவுடமைநாட்டுத் தலைவன் இங்கு வரவிருக்கிறார், அவர் தனக்கு நடத்திய வரவேற்பைப்போல இங்கு நடத்தவேண்டுமே ; அதற்கு இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் ஒத்துழைப்பார்களா, அல்லது தன்மேலுள்ள வெறுப்பை, அந்த வரவேற்பில் கலந்துகொள்ளாததன்மூலம் காட்டிவிடுவார்களா, என்ற அச்சத்தின்பேரிலே தான் நேரு குழைந்து குழைந்து பேசினார் என்பதை அரசியல் யூகமறிந்தோர் நன்கு புரிந்துகொண்டிருப்பார்கள். இல்லாவிட்டால், மொழிப் பிரச்சினையில் நமது கருத்தையே நேரு வலியுறுத்தியிருக்கமாட்டார் ; அன்று நம்மைத் திட்டியதற்கு வருந்தும் வகையில் ''நான் சில வேளைகளில் தவறாகப் பேசிவிடுவேன்'' என்று பேசியிருக்கமாட்டார்.

வெளிநாட்டாரின் புகழுக்குப் பாத்திரமாகிப் பழக்கப்பட்ட நேரு, அந்தப் புகழ், தான் சாகும்வரை 'சிரஞ்சீவி'யாக இருக்கவேண்டுமே என்று எண்ணித்தான் எதிரான கருத்துடையோரையும் இனிப்பான வார்த்தைகளால் மகிழ்விக்க முயன்றிருக்கிறார்.

ஆசிரியத் தோழமைக்கு.

அன்பு மிகு ஆசிரியரவர்களே !

1-10-1955 'தென்றல்' இதழ் கண்டேன் ; களிப்பு மிகக் கொண்டேன். யான் கொண்ட களிப்பிற்குக் காரணங்கள் அந்த இதழில் வந்திருந்த கருத்து மிக்க எழுத்தோவியங்களே ! முகப்புச் சித்திரத்தின் முழு அழகில் ஈடுபட்ட பின்னர் அடுத்த பக்கத்தைப் புரட்டினேன் ! என்னை அளவிலா ஆனந்தத்திலாழ்த்தியது அப்பக்கத்திலிருந்த 'பூபதி'யவர்களின் பொற்பு மிக்க கட்டுரையாம் '' கலைச் சொற்கள்—கண்ணோட்டம்'' என்பது. தமிழ் பயிற்று மொழியாக வேண்டும் என்ற விழுமிய நோக்கம் ஈடேற '' பூபதி '' போன்றவர்களின் பொன்னான கட்டுரைகள், மின்னலிட்டு மறையாது கன்னல் நிகர் மொழிக்கு இன்னல் தேடும் கசடர் வாயடைக்க—வாழ்ந்த வளமான வண்டமிழ் மொழியினைக் கல்லூரி மாணவர் பல்கலை வளத்துடன் காணத்தக்க மாண்பு மிக்க சூழ்நிலையை விரைவிலே உருவாக்க அடிக்கடி அவ்வப்போது தென்றலில் இடம் பெற வேண்டும் என்பது என் அவா !

'தென்றலின்' மூன்றும் பக்கம் உங்களது உள்ளத்தடத்திலே ஊற்றெடுத்துப் பொங்கிய எண்ண அலைகளைச் சிதறவிட்டிருந்தது ! அடுத்து வந்த பக்கங்களிலே என்னைக் கவர்ந்தது பெரியார் ஈ. வே. ரா வைப் பற்றி அரசியல் மேதை சம்பத் அவர்கள் தந்திருந்த கூற்று. பெரியாரது உருவத்தை விமானத்திலேற்றி ஊர்வலம் வரும் இந்நேரத்தில் '' அந்தப் படம்—'' இரண்டடி தாடியுடைய '' அந்தப் படம் பெரியாரல்ல ! அவர் முன்பு கொண்டிருந்த—இப்பொழுது நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலாதாரமான கோட்பாடுகளாக உள்ளவைதான் பெரியார்! எனவே பெரியார் தி. க. வில் இல்லை! தி. மு. கவில் தான் உள்ளார்'' என்ற சொல்லின் செல்வரது பேச்சு என் உள்ளத்தைக் குளிர்வித்த உயிர்க் கருத்தாகும்.

தங்களது ''வள்ளுவன் மூத்தோன்'' வழக்கம் போல் கற்பனைது மட்டரக புத்தியை விளக்கி, வள்ளுவனது உயர் கருத்தை விரித்துரைத்து வந்திருந்தது.

அடுத்து, தாங்கள் புதிதாக ஆரம்பித்திருக்கும் ''வேலங்குடித் திருவிழா'' தொடக்கம் முதல் ''தொடரும்'' என்ற வார்த்தை கண்ணில் படும்வரை உள்ளத்தைத் தொடும் வண்ணம் உயிரோட்டத்துடன் தீட்டப் பட்டு, மூன்றாவது பகுதியின் முடிவில் முழு உணர்ச்சியையும் (TEMPO) கிளப்பும் வழி அமைக்கப்பட்டுள்ளது அறிந்து போற்றற் குரியது! மேலும் கலைஞர் கருணாநிதி அவர்கள் கல்லக்குடிப் போராட்டத்தின் வாயிலாக சிறை சென்று மீண்டபின் அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவை யொட்டி ''தென்னரசு'' அவர்களது பேனா தீட்டியுள்ள '' பந்தலுக்கு வெளியே ''—பாராட்டத் தக்க தொண்டு. மற்றபடி வெண்பாப் போட்டியில் எழுதியுள்ள என்னருமைத் தோழர்கள் யாவரும் மதத்தின் மடக் கொள்கைகளை எத்துணை அளவு வெறுத் தொதுக்குகின்றனர் என்பது அவர்கள் '' கற்பழித்துப் போன கடவுள்சட்கு'' தரும் சவுக்கடியால்—ஏன் ? செருப்படியால் தெரிகிறது !

—திருமாவளவன்,
பாபநாசம்.

ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.

◉

தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள், தொண்டைப் புண் நோய் காரணமாக, சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் தங்கி, 9-9-55 முதல் சிகிச்சை பெற்று வருகிறார். சட்டசபைக் கூட்ட நிகழ்ச்சிகளுக்கும் போக முடியாமலிருக்கிறார்; மேலும் இரண்டு வாரங்கள் வரை தங்கி சிகிச்சை பெற வேண்டுமென்றும், தொண்டைப் புண் குணம் பெற்ற பிறகு, தொண்டையில் சிறு இரண சிகிச்சை செய்ய வேண்டி இருக்கும் என்றும் டாக்டர் திரு. சி. சத்திய நாராயணன் அபிப்பிராயப்படுகிறார். வழக்கம்போல் உணவு வகைகள் அதிகம் உட்கொள்ள முடியாத காரணத்தினால், தோழர் கோவிந்தசாமி அவர்கள் சிறிது உடல் பலக் குறைவாகவே இருக்கிறார். நண்பர்கள் அடிக்கடி போய்ப் பார்த்து வருகிறார்கள். இன்னும் பத்து நாள் அங்கிருக்க வேண்டுமென டாக்டர் சொல்லியிருக்கிறார்.

அறிவிப்பு

◉

பொதுக் கூட்டங்களுக்குத் தேதி கேட்டு ஏராளமான தோழர்கள் கடிதமெழுதியிருக்கிறார்கள். எனக்கு இந்த மாதம் முழுதும் சுற்றுப்பயணமிருக்கிறது. நவம்பரில் இலங்கை (3-10-55 அன்றுதான் பாஸ்போர்ட் கிடைத்தது) செல்ல இருக்கிறேன். டிசம்பரில் பம்பாய்க்கு வர ஒப்புதல் அளித்து விட்டேன். எனவே கடிதமெழுதியிருக்கும்தோழர்களுக்கும், மற்ற தோழர்களுக்கும் ஜனவரி முடிய பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்ள ஓய்வு இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

— கண்ணதாசன்

வருந்துகிறோம்

நமது அலவலகத்தின் முன்னாள் மேலாளர் தோழர் நா. வயிரவன் அவர்களின் மகன் மணி இயற்கை எய்திய செய்தி கேட்டு திடுக்கிட்டோம்-துக்கித்தோம். மகனைப் பிரிந்து, துயருற்றிருக்கும் வயிரவன் அவர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆ-ர்.

மோதி உடையும் சீதையின் கற்பு

இராம—இராவணப் போர் முடிந்தது. ஆனுல் இராமயணம் முடியவில்லை: சிறை வைத்திருந்த சீதை மீட்கப்பட்டாள். இராமனுக்கு மீண்டும் உடைமையானுள். இராமன் போர்க்களத்திலே நின்றுகோண்டு சீதையை அழைத்துவரும்படி கூறிஞன். பல நாளாகப் பிரிந்திருந்த தன் காதலியைப் பார்க்க அவன் போர் முடிந்ததும் ஏன் ஓடோடிக் கண்டிருக்கக் கூடாது? அன்புப் பெருக்கால் முயங்கியிருக்கக் கூடாது? என்ற கேள்விகள் இயல்பாய் எழலாம், இராமன் உள்ளத்திலே ஒரு சிறு குழப்பம் ஏற்பட்டிருந்தது அதனைச் சிறு குழப்பம் என்று சொல்லிவிட முடியாது. நினைத்துப் பார்த்தால் அது அணுகுண்டைக் காட்டிலும் மிகப் பேரியது: ஆபத்தானது. அந்தக் குழப்பம் இராமனை பின்னிப் புடைத்துக் கோண்டிருந்தது.

பல ஆண்டுகள் பிரிந்திருந்து கூடப்போகிற கணவன், மனைவியர்க்கிடையே 'சந்தேகம்' என்ற ஒன்று வந்து இடைமறித்தது.

இராமன் தன் அருமைக் காதலி சீதையின் கற்பில் ஐயம் கோண்டான். அவளைத் தன் கண்களால் காணவும் நாணிஞன்.

" கண்வலியால் வருந்துகிறவனுக்குத் ஒளிப்பிழம்பின் வெளிச்சம் எப்படி ஆகாதோ சகிக்க முடி

" கணவன் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கும் எவனுவது தியவனின் இல்லத்தில் பத்து மாதங்கள்வரை அவனது அதிகாரத்துக்கும் ஆற்றலுக்கும் உட்பட்டு வாழ்ந்த தன் மனையாளை மறுபடியும் சேர்த்துக்கொள்ளுவானு ? "

"இராவணன் உன்னைத் தொட்டு மடிமீது வைத்துக் கொண்டு போனுன் ; ஆசை பொழியும் கண்களால் நேத்திரங்களால் உன்னைப் பார்த்தான் ; களங்க மற்ற 'இச்வாகு' குலத்தில் பிறந்தவனென்று பெயர்வைத்துக்கொண்டு

உன்னை இப்பொழுது சேர்த்துக் கொண்டால் ஒவ்வொரு உயிரும் 'சீ சீ' என்று நிந்திக்காதா?"

கோண்டிருந்தான். அவன் உள்ளத்திலே தோன்றி முகிழ்த்த சந்தேகத்தின் வலிமை அத்தகையது. அன்பு தோன்றிப் பரவியிருந்த உள்ளத்தை—அதாவது மலரை இரும்பாக்கி விட்டது.

இராமனின் சொற்களிலிருந்து அவன் கோண்ட சந்தேகத்துக்கு அடித்தளங்களாக அமைந்தவைகளில் இரண்டை முக்கியமாகக் கோள்ளலாம்

1. பகைவனின் ஆணைக்குட்பட்டுப் பல மாதங்கள் சிறையிருந்த பெண் எப்படி உடலால் தூய்மையுள்ளவளாக இருக்கமுடியும் ?

2. இராவணன் அவளைத் தூக்கிக் கொண்டுபோகும்போது அவளது இரு தொடைகளிடையே கை போக்கித் தூக்கிஞன் ; தன் மடிமீது இருத்திக் கொண்டு போனுன். அப்படி மற்ருெருவனுல் தீண்டப்பட்ட பெண்ணைத் தெரிந்தும் மனைவியாக ஏற்றுக் கொள்ள முடியுமா?

இராமனுல் கேட்கப்படும் இவ்விரண்டு கேள்விகளும் இராமயணம் முடியும் வரையும் கேள்விகளாகவே இருக்கின்றன. இராமன் சீதையை மீண்டும் ஏற்றுக் கோள்ளும்போது, அவன் எந்தேந்தக் கேள்விகளை எழுப்பினுனே அக் கேள்விகளுக்கு அவனே விடையிறுக்க முடியவில்லை. அவனுல் எழுப்பப் பட்ட ஐயங்கள்

இமயவரம்பன்

சீதை கற்புடையவளா என்கிற கேள்வி விரும்பியோ, விரும்பாமலோ, விவாதத்திற்கு வந்துவிட்டது. வந்த பிறகு உண்மையறிந்து சொல்ல வேண்டியது ஆராய்ச்சியாளர்கள் கடமை. உண்மை என்பது என்ன? விவரமான ஆராய்ச்சியின் முடிவிலே தட்டுப்படுவது. இந்தக் கட்டுரையில் சீதையின் கற்பு பற்றிய உண்மையைக் கண்டு பிடிக்க விவரமான ஆராய்ச்சி நடத்துகிருர் இமயவரம்பன்.

இந்தப் புனை பெயரிலே ஒளிந்திருக்கும் நண்பர், நாடு நன்ருக அறிந்த ஒரு புலவர். இவர்நடத்துகிற இந்த ஆராய்ச்சியின் முடிவு சீதையின் கற்பு தவருடு போயிருப்பதைக் காட்டுகிறது. 'ஐயோ; கற்பிழந்தவளா?' என்று யாரேனும் குதித்தால் நாமென்ன செய்ய முடியும்! ஆராய்ச்சி சொல்லுகிறது! வான்மீகியையும், கம்பனையும் முழுக்கப் படித்தே புலவர் இதை எழுதுகிருர். படித்துப் பாருங்கள். [ஆ-ர்.]

இடத்திலேதான் இருந்து வாழுகிறது. அன்பாலும் ஆணையாலும் அதை அழித்து ஒழித்துவிட முடியாது.

இராமன் சீதையை ஏற்றுக்கோள்ளும் போது சந்தேகம் தோன்றிய தன்மனத்திற்குச் சமாதானம் கூற முயல்கிருன்.

" ஐயிருதிங்கள் இருந்தாயே, " அப்படி " ஒன்றும் நடக்கவில்லையா ? "

யாததோ, தொல்லை தருமோ அப்படி எனக்கெதிரில் நீ நிற்பதை என்னுல் சகித்துக் கொள்ள முடியவில்லை ; என் முன் நில்லாதே!"

என்று இராமன் சீதையை நோக்கிக் கூறுவதைப் படிக்கும்போது இராமனின் உள்ளத்தில் குடிகோண்ட சந்தேகத்தின் வலிமையைக் காண்கிருேம். மனிதக் கருவிலே தோன்றி, மனிதர்களுக்கிடையிலே வாழவேண்டிய இராமனுக, மனிதர்களையேஆளவேண்டிய இராமனுக. மனிதக் குணங்களை உடைய இராமன் தேய்வப் பிறவியாக வந்தவன் என்று வான்மீகியார் கூறினுலும் மனித எல்லைக்குட்பட்ட ஒரு விஷயத்தைத் தேய்வ ஆற்றலாலும் திர்க்க தரிசனத்தாலும் தேளிந்தான் என்று கூறவில்லை, எனவேதான் இராமன் எல்லா மனிதர்களைப் போலவே சந்தேகப்படுகிருன். கோபப்படுகிருன், கண் சிவந்து விம்முகிருன்.

இராமன் மேலும் சீதையை நோக்கி எவ்வாறு பேசுகிருன் என்று பார்க்கவேண்டும்.

" நீ நிகரற்ற அழகுள்ளவள் ; பார்ப்பவர்களின் மனதைக் கவர வல்லவள். இராவணன் உன்மேல் ஆசைவைத்து எடுத்துக்கொண்டு போனுன் ; பத்துத் திங்கள் வரையில் அந்தப் புரத்தில் வைத்திருந்தான். சகல விதத்திலும் அவன் வசத்திலிருந்தாய்; அவனுக்கு ஸ்வாதீனப்படாமல் இருக்க முடியுமா "

[யுத்தகாண்டம் சருக்கம்-117
வான்மீகி ராமாயணம்]

இவை ராமனின் சோற்கள். ராமன், தான் சீதையை ஏற்றுக் கோள்ள மறுப்பதற்குக் காரணம் காட்டிப் பேசுகிருன். சந்தேகத்துக்கு இடமில்லாமல் அவன் சந்தேகம் கோள்ளவில்லை என்பதை வற்புறுத்துகிருன். அவன் சீதையை நோக்கிக்கூறும் அனைத்தையையும் நாம் படிக்கும்போது ராமனு இவ்வாறு பேசுகிருன் என்று மலைக்கிருேம். இராமன் ஒருவேளை கோபத்தில் கண்டவாறு பேசுகிருனுே என்று நினைப்பதற்கும் இடமில்லை. தன் பேச்சில் தேளிவாகச் சோல்லி விடுகிருன்.

" நான் கோபத்தால் பதறிச் சோல்லவில்லை ; இது சாந்தமாய் நெடுநேரம் ஆலோசித்துச் செய்த முடிவு " என்று ராமனே கூறுகிருன்.

நெடு நேரம் ஆலோசித்து முடிவு செய்த ராமனிடம் சீதை 'தான் குற்றமில்லாதவள்' என்று சோல்லி மன்ருடி நிற்கிருள். ராமனின் உறுதி கலையவில்லை. சீதை தீயில் இறங்கச் செல்லுகிருள், ராமன் மன உறுதியோடு பார்த்துக் கோண்டிருக்கிருன், அவள் தீயிடம் நெருங்குகிருள். அப்போது ராமன் பேசாமல் உறுதியோடு நிற்கிருன். மும்முறை சீதை வலம் வருகிற போதும் அவ்வாறே இருக்கிருன். தீயிலே குதிக்கும்போதும் அவன் மாருத உள்ளத்தோடு பார்த்துக்

இறுதிவரை ஐயங்களாகவே நிலை பேறுகின்றன. இராமனுக்கு அமைதி கிடைக்கிறது ; ஆனுல் அவன் ஐயங்களுக்கு அமைதி கிடைக்கவில்லை.

சீதை தீயிலே குதித்ததும், தீக் கடவுள் தோன்றிச் சீதையைத் தூக்கிக் கோண்டு வந்து இராமனை ஏற்றுக் கோள்ளும்படி கூறுகிருர், மற்ற தேவர்களும் தோன்றிச் சீதையின் பேருமையைக் கூறுகிருர்கள். இராமனின் மனம் மாற்றப்படுகிறது ; சரியான காரணங்கள் அவன் மனத்தை

மாற்றவில்லை. தேவர்கள் சோல்லுகிருர்களே என்பதற்காக ஏற்றுக் கோண்டுவிட்டான்.

சந்தேகம் ஏற்படுமானுல் அச் சந்தேக புத்தியைக் காரண ரீதியாக வேல்லவேண்டும் ; இல்லாவிட்டால் அது களையப்படாமலே தோன்றிய

" கட்ல் கரை புரளுமா ? கற்புக் கனலாலும், தன் ஒளியாலும் காக்கப்படும் இவளை இராவணன் நெருங்க முடியுமா ? இவளுடைய அகண்ட கண்கள் அருள் மழையையும் நிறைந்த செல்வத்தையும் பொழிவதற்காகவே ஏற்பட்டவை, ஆனுலும் கோபம் கொண்டால் அதே கண்கள் ஒரு கணத்தில் எல்லா உலகையும் சுட்டெரிக்கும் "

இப்படி இராமன் சோல்லிக் கோண்ட சமாதானம் உண்மையான சமாதானமாகுமா ?

கற்புக் கனலால் காக்கப்படும் சீதையை இராவணன் நெருங்க முடியாதேன்ருல் அவளை இராவணன் தோட்டுத் தூக்கித் தன் மடி மீது இருத்தியபோது சீதையின் கற்புக கனல் எங்கே போயிருந்தது ? இராவணன் சீதையின் தலைமயிரைப் பிடித்து இலங்கையில் இழுத்துவந்த போது அவளது கற்புக் கனலை யார் தண்ணீர்விட்டு அணைத்தார்கள் ?

" கோபம் கோண்டால் எல்லா உலகையும் சுட்டேரிக்கும்" என்ருல் இராவணன் தூங்கும்போது சீதை ஏன் கோபம் கோள்ளவில்லை ?

அக்னிபகவான் சோல்கிருர் என்ருே, சூரிய சந்திரர்கள் சீதையின் பேருமையைப் பேரிது படுத்திச் சோல்லுகிருர்கள் என்ருே இராமன் அதனைத் தேற்றிக் கோண்டிருக்கலாம். இராமனின் சமாதானம் இராமன் இராமனுக்குச் சோன்ன சமாதானமேயன்றி இராமன் உல

(10-ம் பக்கம்)

ஐயன் கேட்டதும் அன்னை அழுததும் மெய்யெனில், கற்பு...?

[அமராவதியின் உதடுகள் வெளுத்துப் போகின்றன. மெல்ல மெல்லப் பேசியபடி களவியல் முறையில் அவர்கள் கரை மீறி ஆனந்திக்கிறார்கள்,]

செந்திருவின் கொங்கையினும் தேர்வேந்தன் ஆகத்தும்
வந்துருவ வார்சிலையைக் கால்வளைத்து - வெந்தீயும்
நஞ்சும் தொடுத்தனைய நாம மலர்வாளி
அஞ்சும் தொடுத்தான் அவன்.

ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி
இருவர்எனும் தோற்றம் இன்றிப் - பொருவெங்
கனற்கேயும் வேலானும் காரிகையும் சேர்ந்தார்
புனற்கே புனற்கலந்தாற் போன்று:

குழைமேலும் கோமான் உயிர்மேலும் கூந்தல்
மழைமேலும் வாளோடி மீள - விழைமேலே
அல்லோடும் வேலான் அகலத் தொடும்பொருதாள்
வல்லாடும் கொங்கை மடுத்து

வீரனக லச்செறுவின் மீதோடிக் குங்குமத்தின்
ஈர இளவண்டல் இட்டதே - நேர்பொருத
காராரும் மெல்லோதிக் கன்னியவர் காதல்எனும்
ஓராறு பாய உடைந்து.

தையல் தளிர்க்கரங்கள் தன்தடக்கை யாற்பற்றி
வையம் முழுதும் மகிழ்தூங்கத் - துய்ய
மணந்தான் முடித்ததற்பின் வாள்நுதலும் தானும்
புணர்ந்தான் நெடுங்காலம் புக்கு.

என்று நளவெண்பாவில் காணப்படும்நளன் தமயந்தி காதற் செய்தி இங்கே அப்படியே பரிணமிக்கிறது. களைப்புற்ற நிலையில் சாய்ந்திருக்கிறான் அம்பிகாபதி. அவன் மார்பில் முகம் வைத்திருக்கிறாள் அமராவதி. 'அமராவதி' என்றொரு கடுமையான குரல் கேட்கிறது. திடுக்கிட்டு எழுகிறார்கள் இருவரும். எதிரே குலோத்துங்கனும் வாணியன் தாதனும் ஒட்டக்கூத்தனும் நிற்கிறார்கள்.

குலோ : கேடு கெட்ட பெண்ணே! மானத்தை அழித்து விட்டாயே! ஈனச் செயலில் இறங்கி விட்டாயே! இனி நீ என்மகளல்ல! அடா, அம்பிகாபதி! அறிவு கெட்டவனே! புலவனா, நீ! புத்தியற்ற மிருகமே! ஆறுவதில்லை! அடங்காது என் சினம்! தீருமடா உன் வாழ்வு! செத்துவிடத் தயாராயிரு! யாரங்கே!

[என்றதும் இரண்டு சேவகர்கள் வர]

குலோ : இவர்களைச் சிறையில் தள்ளுங்கள்! நாளை விசாரணை!

[என்றதும் வாணியன் தாதனும் ஒட்டக் கூத்தனும் பெருஞ் சிரிப்புச் சிரித்தல்]

— காட்சி முடிவு —

களம் : 31

காட்சி : 31

இடம் : நீதிப்பேரவை

நேரம் : காலை

[புலவர்கள், அமைச்சர்கள், குடி மக்கள் அத்தனை பேரும் கூடியிருக்கிறார்கள். ஓர் அமைச்சர் எழுந்து]

அமைச் : புலவர் பெரு மக்களே! பெருங்குடி மக்களே! தன் மகள் அமராவதிக்குப் பாடம் போதிக்க அம்பிகாபதியை நியமித்தார் குலோத்துங்க மன்னவர். பாடங் கேட்க வந்த மாணவியைக் காதல் நாடகத்திற்கு அழைத்த அம்பிகாபதி, அவளைக் கெடுத்ததன் மூலம் அரசகுலப் பெருமையை அழித்தான். அதற்குத் தன்னை யறியாமல் இணங்கிய அவளும் அரசகுலப் பெருமைக்கு இழுக்கே தேடினாள். இருவரும் குற்றவாளிகள் என்றே கருதப்பட்டு இரவே சிறையிடப்பட்டார்கள். விசாரணை நடக்க இருக்கிறது.

[கம்பர் சோகமாக உட்கார்ந்திருக்கிறார். மோனமாகவி, ஆய் தேவி, செம்பியன் நாட்டார் உட்பட எல்லாப் புலவர்களும் வந்துள்ளனர். அம்பிகாபதியும் அமராவதியும் இழுத்து வரப்படுகிறார்கள். அரசன் முன் நிறுத்தப் படுகிறார்கள். கூத்தன் எழுந்து,]

கூத் : அம்பிகாபதி! குற்றச் சாட்டுகளை ஒரு முறை படிக்க வேண்டுமா? அல்லது, தெரிந்ததுதான் என்பதால் பதிலே தொடங்கி விடுகிறாயா?

அம் : பதிலா? எதற்கு?

கூத் : காவலன் செல்வியிடம் காதல் புரிந்ததற்கு!

அம் : காதல் புரிந்தேன்! அதற்குப் பதில் என்ன தேவை?

கூத் : அவ்வளவு சாதாரணமாகப் பதில் சொல்லுகிறாயே? நீ செய்தது என்ன, சிறிய குற்றமா?

அம் : முதலில், குற்றமா, இல்லையா என்பதைக் கேளுங்கள். அதற்குப் பிறகல்லவா சிறியதா பெரியதா என்கிற ஆராய்ச்சி!

கூத் : இந்தக் காதல் குற்றமற்றது என்று நீ கருதுகிறாயா?

அம் : வெட்கக் கேடான கேள்வி! விரும்பினாள்; விரும்பினேன்! அரும்பு மலர்ந்தது; ஆனந்தம் பிறந்தது! உலகம் தோன்றிய காலம் முதல் இது ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இயற்கையாக உள்ளது. அதட்டும் குரலும், ஆணையிடும் போக்கும், மிரட்டுகின்ற பார்வையும், இதிலே செல்லாது; தேராது!

குலோ : அந்த ஒருத்தி அரசனின் மகள்!

அம் : ஆண்டவன் மகளாகத்தான் இருக்கட்டுமே! அவள் மனநிலை என்ன என்பதுதான் இதில் கேள்வியே தவிர, தந்தைக்குள்ள அதிகாரம், தாய்க்குள்ள பாச வரம்பு, தமையனுக்குள்ள சகோதர உரிமை, இவையெல்லாம் இந்தக் கேள்வி எல்லைக்குள் வரமுடியாதவை!

கூத் : அளந்து பேசு! அவளுக்கு மண முடிப்பது கூட மன்னனும் தந்தையுமாகிய குலோத்துங்க சோழரின் வரம்பிற்குட்பட்டதுதான்.

அம் : மடத்தனமான பேச்சு! மலர் மொட்டாக இருக்கும்வரைதான்கொடிககுச்சொந்தம்! பருத்தி காயாக இருக்கும் வரைதான் செடிக்குச் சொந்தம்! மகள் சிறுமியாக இருக்கும்வரைதான் தாய் தந்தைக்குச் சொந்தம். மலையிற் பிறந்த சந்தனம் மார்பை அலங்கரிக்கிறது. கடலில் பிறந்த முத்து காரிகையைச் சிங்காரிக்கிறது. 'தேருங்கால், நும் மகள் நுமக்கும் அங்ஙனையளே மன்னா!'

குலோ : தத்துவம் எனக்குத் தேவையில்லை! முத்தை ஈன்ற கடலும், சந்தனம் தந்த மலையும், மொட்டு வடித்த கொடியும், காயீன்ற செடியும் குலோத்துங்கனைப்போல் உள்ளமும் உணர்ச்சியும் கொண்டவையல்ல! உன்மேல் சாட்டப்பட்டிருக்கும்குற்றம், அந்தஸ்தைமறந்து காதல் புரிந்து, அரசன் மகளைக் கற்பழித்தாயென்பது!

அம : (குறுக்கிட்டு) யார் சொன்னது அப்படி? காதல் புரிந்து களவியல் கண்டோம்! நாதத்தில் வீணை நடுங்க இணைந்தோம்! ஆதித் தமிழும் அடுத்து வந்த கனித்தமிழும், ஓதிவைத்த வழியிலேயே உயிரோடு உயிரானோம்! போதை ஊட்டினர் புலவரிற் கடையர் சிலர் என்பதால், ஆதித் தமிழ் முறைகள் அத்தனையும் மறந்துவிட்ட சோழமன்னா! நடந்தது இழிசெயலல்ல! நல்லதோர் தமிழ்ப் பண்பு!

குலோ : (ஆத்திரத்தோடு) அமராவதி!

அம : ஆம்! அதே பெயரை இவர் அன்புடன் அழைத்தார். ஏன் வருகிறது ஆத்திரம்?

அம் : காரணம், ஒட்டக்கூத்தரின் வாய்த்திறம்!

கூத் : (எழுந்து) சொந்த புத்தி இல்லாதவர் சோழமன்னர் என்கிறாயா?

வாணி : (எழுந்து) அப்படித்தான் கருதுகிறான், கைப்பிடி ஒன்றுக்குக் காணமாட்டாத இவன்!

அம் : பிடித்துப் பாருமே பார்ப்போம்!

வாணி : என்ன செய்வாய்?

அம் : எடுத்து வைப்பேன் தலையைத் தனியாக!

கூத் : செய்தது கீழ்த்தரச் செயல்! வாய் வேறு நீளுகிறதோ?

அம் : வாய் என்ன, அரசவைக்குப் புறம்பாக நீங்கள் கேள்விகளைத் தொடுத்தால், கையும் நீளும்!

(9-ம் பக்கம் பார்க்க)

களம் : 28

காட்சி : 28
இடம் : ஒட்டக்கூத்தன் வீடு
நேரம் : அந்தி

[ஒட்டக் கூத்தன் வெளி முகப்பில் உட்கார்ந்திருக்கிறான். வேக மாக வருகிறான் வாணியன் தாதன்.]

கூத் : என்னடா, புலவா ! ஏதாவது யானை துரத்திற்று ?

வாணி : இல்லை ! யானையை மான தூக்கிக் கொண்டு விட்டது !

கூத் : யானையை மான் தூக்கியதா ? புலவா ! ஏதோ அதிர்ச்சியில் உன் மூளை கலங்கியிருக்கிறது! கொஞ்சம் தலையைக் குலுக்கிவிடு.

வாணி : கேலி பேசாதீர், கூத்தரே ! வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டது.

கூத் : ஆற்றில் இறங்கியதே முட்டாள் தனம் ! அதனுல் தானே வெள்ளம் தலைக்குமேல் போயிருக்கிறது ?

வாணி : இல்லை, கூத்தரே ! காதல் வலையில் விழுந்து விட்டார்கள் !

கூத் : ஆணும் பெண்ணும் தானே ! அவர்கள் வாழ்க ! காதல், உலகத்து இயற்கை ! அதைக் கண்டு கொண்டவர்கள் பலர், அதன் மென்மையையும், உண்மையையும் அறிந்த தில்லை. காலம் என்ற மாபெரும் கடல் நடுவே அமைக்கப் பெற்ற கலங்கரை விளக்கமே காதல். வாழ்க்கை என்பது ஒரு மலர். காதல் அதிலே ஊறும் தேன். வாலிபரிடம் தோன்றும் காதலின் முதல் அறிகுறி கோழைத் தனம் ; பெண்களிடம் தோன்றும் காதலின் முதல் அறிகுறி துணிச்சல்.காதல் குதிரை; திருமணம் கடிவாளம்...

வாணி : ஐயகோ, புலவா! நிறுத்து, புலவா, நிறுத்து! நான் பெரிய செய்தியொன்று சொல்ல வருகிறேன். நீ தத்துவம் பேசுகிறாய் !

கூத் : பெரிய செய்தி என்பதே தத்துவந்தான்! எளிதாகச் சென்று கொண்டிருக்கும் மனிதனுக்கு, முன்னலே வந்து விழும் இடி

வாணி : என் தலையில் விழுந்த அடி !

கூத் : அப்படியானல் கொஞ்சம் தண்ணீர் குடி !

வாணி : ஐயோ உன் கிண்டலைச் சீக்கிரம் முடி !

கூத் : இதோ இருக்கிறது தடி !

வாணி : பிரசம் போதும், புலவா ! போதும் ! நேற்று முதல் அம்பிகாபதியும் அமராவதியும் காதலிக்கிறார்களாம்.

கூத் : (திடுக்கிட்டு எழுந்து) ஆ ! என் காதலிக்கிறார்கள் ?

வாணி : என்ன கேள்வியிது ! காதல் பிறந்து விட்டது ; காதலிக்கிறார்கள் !

கூத் : எப்படித் தெரியும் உனக்கு ?

வாணி : சுந்தரசோழனும், மல்லிகையும் ஆற்றங் கரையில் பேசிக் கொண்டிருந்தார்கள் !

கூத் : அவர்களுக்கு அங்கென்ன வேலை ?

வாணி : அவர்களும் காதலிக்கிறார்கள் !

கூத் : குடி கெட்டது!

வாணி : நாமும் தினசரி அரண்மனைக்குப் போகிறோம். நம்மைக் குறைந்தபட்சம் ஒரு தோழியாவது காதலிக்கிறாளா ? அம்பிகாபதியைப் பார் ! அரசகுமாரியே மயங்கி விட்டாள் !



கூத் : அவனென்ன, அவ்வளவு அழகனே ?

வாணி : இல்லை !

கூத் : ஆண்மை மிகுந்தவனே ?

வாணி : இல்லை !

கூத் : பெரிய புலவனே ?

வாணி : அதுவுமில்லை !

கூத் : நம்மை விடச் சிறந்தவனே ?

வாணி : நிச்சயமாக இல்லை ! ஆனல், இவ்வளவு தகுதிக் குறைவுக்குப் பின்னும் காதல் பிறந்திருக்கிறதே ! அதுதானே அவனுக்குள்ள பெருமை !

கூத் : நம்மைத்தான் யாரும் மதிப்பதில்லை !

வாணி : உம்மை உமது மனைவி கூட மதிப்பதில்லை !

கூத் : டேட, புலவா ! இதைச் சும்மா விடக்கூடாது !

வாணி : ஆம் ! விடக்கூடாது !

கூத் : மன்னரிடம் கூறி......!

வாணி : மணம் முடித்து வைக்க வேண்டுமா ?

கூத் : (கோபமாக) டேய்! மரண மேடைக்கு அனுப்ப வேண்டும்! அவர்களைத் தூக்குக் கயிற்றில் தொங்கவைக்க வேண்டும்!

வாணி : ஆம் ! அதைத்தான் செய்ய வேண்டும் !

கூத் : சரி ! நாளைக்கு நீ மெதுவாக, அரண்மனையிலிருந்து அந்த நாடகத்தைக் கவனி. நான் சமயத்திற்கு மன்னனை அழைத்துக் கொண்டு அங்கே வருகிறேன் ! பழி தீர்க்க இது தான் சமயம் !

வாணி : உத்தரவு, குருநாதா !

—காட்சி முடிவு—

களம் : 29

காட்சி : 29
இடம் : தெரு
நேரம் : நள்ளிரவு

[கூத்தன் வீட்டிலிருந்து புறப்பட்ட வாணியன் தாதன் கூத்தாட்டவையில் நடந்த கூத்தைப் பார்த்துவிட்டு நடந்து வந்து கொண்டிருக்கிறான். தூரத்தில் ஓர் உருவம் ஒண்டி ஒண்டிச் செல்வது தெரிகிறது. திகைத்து நிற்கிறான் வாணியன் தாதன், தூரத்தில் சென்ற உருவம், ஒரு தெரு விளக்கின் அருகில் போகும்போது, அது அம்பிகாபதி எனக் கண்டு பிடித்துக்கொள்கிறான் வாணியன் தாதன். பின் தொடர்கிறான். அம்பிகாபதி அரண்மனைப் பின் பக்கத் தோட்டத்திற்குச் சென்று, ஏறிக் குதிக்கிறான், அதைப் பார்த்த வாணியன் தாதன் திரும்பி வேகமாக ஓடுகிறான்.]

—காட்சி முடிவு—

களம் : 30

காட்சி : 30
இடம் : அரண்மனைத் தோட்டம்
நேரம் : நள்ளிரவு

[தோட்டத்திற்கு இடையில் அமைக்கப்பட்ட பளிங்கு மண்டபத்தில் உட்கார்ந்தபடி அம்பிகாபதியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அமராவதி, அம்பிகாபதி குதித்த சத்தம் கேட்டு எழுந்து நிற்கிறாள். அவள் அருகில் இருந்த தோழி மல்லிகை கூர்ந்து கவனிக்கிறாள். அம்பிகாபதி அமராவதியின் அருகில் வருகிறான்]

அம் : அமராவதி !

அம : வந்துவிட்டீர்களா ! உட்காருங்கள்.

[என்று கூறி, அவன் உட்கார்ந்ததும், தானும் அவன் அருகில் உட்காருகிறாள். அம்பிகாபதி அவளைச் சேர்த்தணைத்துக் கொள்கிறான். மல்லிகை ஒரு மூலையில் போய் மறைந்து விடுகிறாள். அம்பிகாபதியின் கண்களும் அமராவதியின் கண்களும் பல முறை மோதித் தெறிக்கின்றன. வாய்ச் சொற்கள் என்ன பயனுமிலவாகப் போகின்றன. அம்பிகாபதி தேனுண்டதால்

(5-ம் பக்கம் பார்க்க)

வேங்குடித் திருவிழா

கண்ணதாசன்

2

இந்திரா ஒரு முறை செத்துப் பிழைத்தாள். அவள் மேனி சிலிர்த்தது - சில்லிட்டது. சின்னப்ப பிள்ளை கண்களை அழுத்தமாக மூடித்திறந்தார். நின்ற இடத்திலேயே விழுந்து விடப்போவது போல அவருக்கு ஒரு மயக்கம். யாருக்கும் ஏதும் தோன்றவில்லை. சுந்தரம் அப்படியே சிலையாகி உட்கார்ந்தான். பேச்சுமூச்சற்ற நிலையில் அந்தப் பெருங்கூட்டம் நின்றது. திடீரென்று அந்த அமைதியைக் கலைத்தார், சொக்கப்ப பிள்ளை. பாலன் அருகில் வந்தார். "பிறகு சொல்கிறேன்; முதலில் தாலியைக் கட்டு" என்று தழுதழுத்த குரலில் கூறினார். பாலன், அவரை ஒரு மாதிரியாகத் திரும்பிப் பார்த்தான். "கட்டு தாலியை" என்று அவசரப்படுத்திய சொக்கப்பர், அவன் அனுமதியில்லாமலே, 'கெட்டிமேளம் கெட்டிமேளம்' என்று குரல் கொடுத்துவிட்டு, அவன் தோளில் தன் வலது கையை வைத்தபடி உட்கார வைத்து, "உம்; கட்டு" என்று அவசரப்படுத்தினார். தன் நினைவற்ற நிலையில், என்ன செய்வதென்று புரியாமல், இந்திராவின் கழுத்தில் தாலியைக் கட்டினான் பாலன். பிறகு, சடங்குகள் பலவற்றிலும் கலந்து கொண்டான். மணவறையிலிருந்து பெண்ணை உள்ளே அழைத்துச் சென்றார்கள். பாலன் உட்புறத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். இரண்டு வேலைக்காரர்கள் விசிறி கொண்டுவந்து வீசினார்கள். சொக்கப்பர், தானே வந்து பாலனின் சட்டைப் பொத்தான்களைக் கழற்றிவிட்டார். வியர்த்திருந்த மேனிக்கும், குழம்பியிருந்த உள்ளத்திற்கும், இந்த உபசாரமும் குளிர்ந்த காற்றும் ஓரளவு ஆறுதலளித்தன.

மழை பொழிந்து ஓய்ந்தது போல் மேளச் சத்தம் நின்றது. அந்தச் சத்தத்தினால் ஓய்ந்து போயிருந்த பெண்களின் வம்பளப்பு பரந்த அளவில் கேட்க ஆரம்பித்தது.

"இப்படி ஒரு கல்யாணமா பண்ணணும்! இதுக்கு பொண்ணை மூலையிலே உக்கார வைச்சிருக்கலாமே."

"பார்த்துக்கிட்டே இருங்க, ரெண்டுபேரும் வாழவே மாட்டாங்க".

"எனக்கு முன்னாலே தெரியும்! இல்லையின்னா இந்தக் கருப்பிக்கு இவ்வளவு அலங்காரமான மாப்பிள்ளை எங்கேயிருந்து கிடைக்கப்போகுது?"

"அம்மாடி யம்மா! கல்யாணத்துக்கு தேதி வச்சதும் போதும், மங்கை ஆடின ஆட்டமும் பாட்டும்--எல்லா வண்டவாளமும் இப்பவுல்ல தெரியுது!"

--இப்படி பலவகையான பேச்சுக்கள். எதிரியின் மீது ஏற்படுகிற பொறாமை, அவன் வீழ்ச்சியுறும் போது கேலியும் கிண்டலுமாக மாறுவது உலக இயற்கை. இந்திரா, தனியறைக்குள் கூனிக்குறுகிப் போய் உட்கார்ந்திருந்தாள். அவள் உடம்பில் வியர்வை வடிந்தபடி இருந்தது. கமலம் அந்தப் பக்கம் தலைகாட்டவேயில்லை. மங்கையர்க்கரசியைத் தேடிப் பிடிக்க வேண்டியிருந்தது. சின்னப்ப பிள்ளையும் அவ்வாறே. பாலனின் நண்பர்கள் ஒரு மூலையில் உட்கார்ந்தபடி அரட்டையடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிக்கடி ஓரக்கண்ணால் பார்ப்பதை பாலன் கவனித்தான். தாளமுடியாத வேதனை அவன் நெஞ்சை அழுத்தியது. பொதுவில், மணவீடு மணமிழந்து காட்சியளித்தது. துன்பமாயினும், இன்பமாயினும் சிறிது நேரத்திற்குள் முடிவடைந்து விடுவதுபோல, நேரம் ஆக ஆக, திருமணத்தைப் பற்றிய வம்புப் பேச்சு முடிவடைய ஆரம்பித்தது. சிலர் மட்டும், அந்தத் திருமணத்துக் கலவரத்திலே துவங்கி, நாட்டிலே அதுபோல நடந்திருந்த வேறு பல சம்பவங்களுக்குத் தாவிப் பேசிக்கொண்டிருந்தார்கள். நேரம் ஆக ஆக, ஒவ்வொருவராக விடைபெற்றுச் செல்ல ஆரம்பித்தார்கள். அந்தி படுகிற நேரத்தில், சொக்கப்பர் சின்னப்ப பிள்ளையிடம் வந்து, "இன்றைக்கே சாந்தி முகூர்த்தம் வைத்துக் கொள்ளலாம். நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாதிர்கள்" என்று ஆறுதல் கூறினார். வாய்விட்டு அழுது கொண்டிருந்த மங்கையர்க்கரசியை, சமாதானம் செய்தாள் மீனாட்சி. ஆனால் உடைந்திருந்த இந்திராவின் உள்ளத்திற்கு ஆறுதல் சொல்ல யாராலும் முடியவில்லை. முன் முகப்பில் ஒருவரும் இல்லாத நேரம் பார்த்து, இந்திராவைத் தேடியபடி தனியறைக்குள் நுழைந்தாள் கமலம். பாசமும், பரிவும் கலந்த குரலில் 'அக்கா-அக்கா' என்று அழைத்தாள். அவளது குரலே எதிரொலித்ததே தவிர இந்திராவைக் காணோம். 'அக்கா எங்கே' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு, வெளியிலிருந்த கிழவியையும் கேட்டாள். வெற்றிலை இடித்துக்கொண்டிருந்த அந்தக் கிழவி, சுட்ட கத்திரிக்காயைப் போல் சுருங்கிப்போன தன் இடது கையால் அடுத்த அறையைக் காட்டினாள். சிட்டுப்போல் பறந்து அங்கே சென்றாள் கமலம். அந்த அறையின் வெளிக்கதவு திறந்திருந்தது. உட்கதவு, உட்புறம் தாளிடப்பட்டிருந்தது. குழம்பியபடி நின்று கொண்டிருந்த கமலத்திற்கு, உள்ளிருந்து வரும் விம்மல் சப்தம் நன்றாகக் கேட்டது. "அக்கா, அக்கா" என்று பலமாக அழைத்தாள். பதில் இல்லை. அதிகமான விம்மல் சப்தம் இப்போது வர ஆரம்பித்தது. துடிதுடிக்கும் நெஞ்சத்தோடு, கதவுகளின் விளிம்பின் மீது கண் வைத்துப் பார்த்தாள் கமலம். உடனே, அவள் மேனி சிலிர்த்தது. பயங்கரமான குரலில் "அக்கா," என்று கத்தினாள். படபடவென்று கதவை இடித்தாள். அவள் உடம்பு உச்சிமுதல் உள்ளங்கால் வரை நடுங்கிற்று. வெற்றிலை இடித்துக் கொண்டிருந்த கிழவி, தன் முதுமையையும் மறந்து எழுந்து ஓடி வந்தாள். ஒருவர் பின் ஒருவராக ஓடிவந்தார்கள். அக்கா, அக்கா என்று கதவின் மீது தலையை மோதியபடி அழுதாள் கமலம். ஒருவருக்கும், எட்டிப் பார்க்கவும் துணிவு வரவில்லை; என்னவென்று கேட்கவும் நாவெழவில்லை. எல்லோரும் கதவை இடித்தார்கள். "ஐயோ மகளே," என்று கதறி அழுதாள், மங்கையர்க்கரசி. ஒன்றும் புரியாமலே, "கதவைக் கழற்றுங்கள், கதவைக் கழற்றுங்கள்" என்று கூக்குரலிட்டார் சொக்கப்ப பிள்ளை. சின்னப்ப பிள்ளையும் 'ஓ' வென்று அலறிவிட்டார். அனைவரும் பதறினர். சுந்தரம் எல்லோரையும் நெட்டித் தள்ளிக்கொண்டு ஓடிவந்து, கதவிலே மோதிக்கொண்டான். "இந்திரா, கண்ணு" என்று சத்தம் கொடுத்தான். தூரத்திலிருந்த பாலன், நடுக்கத்தோடு இதைக் கவனித்துக்கொண்டிருந்தான். எல்லோருமாகச் சேர்ந்து கதவைத் தூக்கினார்கள். உள்ளே, அவர்கள் கண்ட காட்சி, குலையை நடுங்க வைத்தது. உத்தரத்திலே கயிற்றைக் கட்டி, கயிற்று வளையத்திற்குள் கழுத்தை நுழைத்து, சுருக்கிட்டுக் கொள்வதற்குத் தயாராக நின்றுகொண்டிருந்தாள், இந்திரா. ஓடிப்போய் அவளைத் தாங்கிக்கொண்டாள், ஒரு பெண். சுந்தரம் அவளது கழுத்துச் சுருக்கை அவிழ்த்தான். ஏளனப்பேச்சுப் பேசிய பெண்களின் இதயங்கள்கூட இளகிக் கொடுத்தன. இந்திராவை அப்படியே நடத்திக் கொண்டு வந்து உட்கார வைத்-

தான் சுந்தரம். காப்பாற்றிய பிறகும் அவன் இதயத்திலே ஆறுதல் கலந்த துன்பம் ஒன்று இழையோடிக் கொண்டிருந்தது. கட்டுப்படுத்த முடியாமல் அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. "ஏண்டா, கண்ணு, எதுக்குடா, இந்த நினைவு? எங்கள் உயிர் இருக்கிறவரை, உனக்கு ஒரு குறையும் வராது. எங்களை விட்டுட்டுப் போக நினைச்சியே!" என்று தழுதழுத்த குரலில் கூறிய வண்ணம் அவள் தலையைக் கோதிக் கொடுத்தான் சுந்தரம். ஒரு வார்த்தைகூடக் கூறுமல் விம்மி, விம்மி அழுது கொண்டிருந்தாள் இந்திரா. அவள் தோள்களிலே கை வைத்து, அவளது மார்பிலே முகத்தைப் புதைத்துக் கண்ணீரால் சேலையை நனைத்துக் கொண்டிருந்தாள் கமலம். முந்தாணையால் வாயை மூடியவாறு எல்லாப் பெண்களும் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனர். 'நாம் பெத்த மகளே, நாம் பெத்த மகளே' என்று அழுதபடி இந்திராவின் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டிருந்தாள் மங்கையர்க்கரசி. சின்னப்ப பிள்ளை மென்று விழுங்கியபடி, 'கல்யாணமே செஞ்சிருக்க வேண்டாம்; பெரிய தப்புப் பண்ணிட்டோம்; நாங்களே, எங்க பொண்ணைக் குழியிலே தள்ளிட்டோம்!' என்று அழுதார். சொக்கப்பர் அமைதியோடு அவர் தோளில் தட்டிக் கொடுத்தார்.

கவனித்துக் கொண்டிருந்த பாலனின் இதயம் அவனைப் பிழிந்து எடுத்தது. நிலைமையை ஓரளவு அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. மணம் முடிக்க முடியாத நிலையிலிருந்த ஒருபெண், இப்படியாவது மணம் முடித்து, எப்படியோ சமாதானப்படுத்தி வாழ வைத்துவிடலாமென்று கருதிய பெற்றோர், அதற்குத் துணைவந்த சம்மந்திமார், அதைப் புரிந்து கொள்ள முடியாத தான்--இப்படி ஒரு சுழற்சி அவன் மனதிலே எழுந்தது. இறுமாப்பான அவன் மனது கரைந்தது. இந்திராவின் மீது அனுதாபம் பிறந்தது. "கருப்பாயிருந்தால் என்ன; வாழ்க்கை இன்பத்திற்கு வர்ணம் கூடவா உண்டு!" என்று ஒரு தத்துவப் பாதையைத் தானாகத் திறந்து கொண்டான். "கருப்பா, சிவப்பா, பணமிருக்கிறதா, இல்லையா? சீதனம் எவ்வளவு வரும்? தீபாவளிக்கு என்ன கொடுப்பார்கள்? பொங்கற் பரிசு என்ன தருவார்கள்" என்றெல்லாம் வட்டிக்கணக்குப் போட்டு, பெண்ணைத் தேர்ந்தெடுப்பது, சராசரி மனிதர்களுக்கு நியாயமாக இருக்கலாம்; ஆனால், எழுத்தாளன், கருப்புப் பெண்களின் கஷ்ட நஷ்டங்களைச் சித்தரிக்கிற கற்பனையாளன், வாழ்விழந்த பெண்களின் கண்ணீரை, மையாக்கி வடிக்கிற சொல்லாளன், இதையெல்லாம் பார்க்கலாமா?" என்று எவனோ ஒரு எழுத்தாளனுக்குப் 'புத்தி' சொல்லுகிற பாவனையில் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். தான் விரும்பும் ஒருத்தியைக் காட்டினும், தன்னை விரும்பும் ஒருத்தி தான் வாழ்க்கைக்கு ஏற்றவள் என்ற பழமொழியை நினைவுபடுத்திக்கொண்டான். அழகில்லாத பெண்கள் புருஷனிடத்தில் உயிரையே வைப்பார்கள் என்று ஒருமுறை சொல்லிக்கொண்டான். அப்போது, தன்னைப்பற்றிய உயர்ந்த மனப்பான்மையும், தெம்பும் அவனுக்கு ஏற்பட்டன.

இந்திரா, தூங்கிட்டுக் கொள்ளப் போனதன் மூலம், எல்லோர் உள்ளத்திலும் ஒரு மாறுபாட்டை ஏற்படுத்தியிருந்தாள். அதிலே அவளுக்குத் தேவையான மாறுதல் ஏற்பட்டது, பாலன் உள்ளத்தில் தான். இந்த மாறுதலை அறிந்து கொள்ளாத இந்திரா, பெருத்த வேதனைக்குப் பிறகு ஏற்படும் அமைதியில் கண்களை மூடிக்கொண்டிருந்தாள்.

பாலன், மெதுவாக "அப்பா, அப்பா" என்றழைத்து, சொக்கப்ப பிள்ளையின் காதில், ஒரு ரகசியத்தைச் செலுத்தினன். கேட்கக் கேட்க முகமலர்ந்த அவர், சின்னப்ப பிள்ளையை மெதுவாக அழைத்து, அதே ரகசியத்தை அவர் காதில் ஊற்றினார். அங்கமெல்லாம் புளகிக்க அதைக் கேட்ட சின்னப்ப பிள்ளை, மெதுவாக மனைவி மங்கையர்க்கரசியை அழைத்து, அவள் காதைக் கடித்தார். மகிழ்ச்சிப் பெருக்கில் மங்கையர்க்கரசி வாயைத் திறக்க, அவளது வாயின் சுற்றளவை அறிந்திருந்த சின்னப்ப பிள்ளை 'படக்' கென்று அந்த வாயைத் தன் கைகளால் மூடினார். அப்போது அங்கே ஒரு புதுக்களை நடமாடிக்கொண்டிருந்தது.

4

முதலிரவுப் படலம்

"..
....
குயிலாக மற்றொருபெண், தனது ஆளன்
கொண்டதுவும் கொடுத்ததுவும் சொல்லிச் சொல்லி
மயிலாக நடித்திட்டாள்; கேட்கக் கேட்க
மாதுக்கு வரப்போகும் சுகமும் தோன்றும்.
பயிலாத வித்தைக்குப் பள்ளி யென்றே
படுக்கையினைப் 'பள்ளி'யெனச் சொன்னார் போலும்"
—மாங்கனி.

இரகசியத்தைக் கேட்டிருந்த கமலம், அளவு கடந்த ஆனந்தத்திலும், அமைதியிலும் துள்ளித் துள்ளி ஓடிக்கொண்டிருந்தாள். ஆம்; அன்றிரவே, சாந்திமுகூர்த்தம் வைப்பதென முடிவு செய்யப்பட்டது. இந்திராவுக்கு இந்த முடிவு சொல்லப்பட்டதே தவிர, பாலனின் மனமாற்றம் தெரிவிக்கப்படவில்லை. ஆகவே, பள்ளியறையில் தன்னை வசைபாடுவார் என்கிற அளவிலேயே அவள் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். சாந்திமுகூர்த்தச் செய்தியைக் கேட்டதும் அங்கிருந்த பெண்கள் வம்பளக்க ஆரம்பித்தனர். ஒருத்தி, "காலையிலே பார்த்தால் கன்னத்தில் பல் பட்டிருக்கு"மென்றாள். இன்னொருத்தி, தனது முதலிரவு அனுபவத்தை விஸ்தாரமாக எடுத்து வைத்தாள். "நாம் முன்னாலே பேசக்கூடாது, ஆம்பளைகள்தான் பேசவேண்டும்" என்று இரவு நிகழ்ச்சிக்கு இலக்கணம் கொடுத்தாள் வேறொருத்தி. "எங்க வூட்டிலே இப்படித்தான்; கடைசிவரை நான் பேசவே இல்லை; அவரு வந்து கெஞ்சு, கெஞ்சுன்னு கெஞ்சினாரு," என்று தன் இலக்கிடப் போக்கையும் நாணத்தையும் உரித்துவைத்தாள் மற்றொருத்தி.

"எங்க வூட்டுக்காரரு பாவம். நான் பேசாமலிருக்க, இருக்க, அவரும் பேசாமலிருந்தார்" என்று தன் கணவனின் அப்பாவித் தன்மையை அளந்து வைத்தாள் ஒருத்தி. எல்லோருமே இந்திராவின் காதில் விழும்படித்தான் பேசினார்கள். ஆனால், இந்தப் பேச்சில் எதுவும் அவளது இதயத்தைத் தொடவில்லை. நாணம் என்ற பெயரிலே தான் ஒதுங்கியிருப்பதை தனக்கு லாபம் என்று கருதி, தூங்கிவிடுவான் தன் கணவன், என்று மனதார நம்பினாள் அவள். நாமும், "சிகப்பாக அழகாகப் பிறந்திருந்தால்..." என்கிற எண்ணமும் அவள் மனதில் இழையோடாமல் இல்லை. அப்போது அவள் உடம்பில் ஏற்பட்ட உணர்ச்சி, "நாம் கருப்பு" என நினைத்ததும் தானாக அடங்கிற்று.

அடுக்கடுக்காய் திரை கொண்ட ஒரு கிழவி, நடையிலே நாட்டியங் காண, அவளருகில் வந்தாள். இந்திராவின் கையைத் தொட்டு "வா" என்றாள். உடனே பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெண்கள், ஒரு கத்தை மலர்களை அள்ளி இந்திராவின் மீது வீசினார்கள். கிழவி, இந்திராவைத் தனியறைக்கு அழைத்துச் சென்று அடுக்காக அலங்காரங்கள் செய்துவைத்தாள். ஒருத்தி, ஒரு மஞ்சள் கயிற்றைக் கொண்டுவந்து, இந்திராவின் கழுத்தில் கட்டினாள். எட்டுப் பிள்ளைகள் பெற்றவள் அவள். பெற்றுப் பெருகி வாழவேண்டும் என்ற ஆசீர்வாதத்திற்கு அறிகுறியாகவே அதைக் கட்டினாள். பிறகு அந்த அறையிலேயே இலை போட்டு, இந்திராவைச் சாப்பிட வைத்தார்கள். சாப்பிட்டு முடிந்ததும் மெதுவாக, அந்தக் கிழவி இந்திராவை அழைத்துக்கொண்டுபோய், மாடியில் விட்டாள். உடனே கதவைச் சாத்திக் கொண்டு வராமல், பாலனைப் பார்த்து, "சந்தோஷமாக இருங்கள்" என்று இந்திரா கொண்டு விடப்பட்ட காரணத்தை ஜாடையாகக் கூறிவிட்டு பிறகு, கதவைச் சாத்திக்கொண்டு இறங்கிப் போனாள் கிழவி.

படுக்கையில் சாய்ந்திருந்த பாலன் இப்போது தான் அவள் முகத்தை நன்றாகப் பார்த்தான். குனிந்த தலை நிமிராத அந்தக் கோதையை, அழகான கருங்கற் சிலையாக அவன் கண்களுக்குப் பட்டாள். "நிறந்தான் கருப்பு; வடிவம் இலக்கணத்தோடு அமைந்திருக்கிறது" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அவன் உள்ளம் உணர்ச்சிக்கூத்தாடத்தொடங்கியது. அவளை அழைப்பதற்கு வாயைத் திறந்தான். வார்த்தை வரவில்லை. நிமிர்ந்து பார்ப்பாள் என்று நினைத்தான்; ஏமாந்தான். "பூமியையே பார்த்துக் கொண்டிருக்கிறளே அங்கே என்னதானிருக்கிறது" என்று பூமியைப் பார்த்தான்; அங்கேயும் ஒன்றுமில்லை. பெருமூச்சினுல் விம்மித் தாழும் அவளது மேலாடை அந்த எழுத்தாளனின் கற்பனைக்கு வேலை கொடுத்தது. அவள் கூந்தலில் சொருகியிருந்த மலரின் மணம் அவன் மனதை மேலும் குழையவைத்தது. 'இது பொறுப்பதில்லை' என்று எழுந்தான். 'இந்திரா' என்று மெதுவாக அழைத்தான். அந்த அழைப்பு அவள் காதுகளுக்கே எட்டவில்லை. அவ்வளவு லேசான குரல். "இங்கு யார் இருக்கிறார்கள்" என்று துணிந்தான். மெதுவாக, அவள் அருகில் சென்றான். இந்திரா இரண்டு கைகளையும் இறுக்க மூடி உதட்டில் வைத்து முகத்தைச் சாய்த்துக்கொண்டு கலங்கியபடி நின்றுகொண்டிருந்தாள். அருகில் நெருங்கிய பாலன் தன் இடது கையால் அவளது இடது கையைப் பிடித்து வலது கையைத் தோளில் சேர்த்தான். புதிய உலகத்தின் முதற்படியில் அவள் மேனி ஒருமுறை ஆடி ஓய்ந்தது. அவனுக்கும் அதே நிலை. அவளை அணைத்தபடி மெதுவாகப் படுக்கை அருகில் கொண்டுவந்து உட்கார வைத்தான். தானும் அருகில் உட்கார்ந்தான். தூரத்தில் இருப்பதாகப் பட்டதோ என்னவோ நெருங்கி உட்கார்ந்தான். இந்திரா, கவலை கலந்த மயக்க நிலையில் இருந்தாள். பாலன் மெதுவாக, "இந்திரா, என்னைப் பாரேன்" என்று சொன்னபடி அவள் முகத்தைத் தன் கையால் திருப்பினான். அப்பொழுது தான் முதன்முதலாக அவன் முகத்தைப் பார்த்த இந்திரா, 'குபுக்' என்று அழுதபடி கட்டிலிலிருந்து இறங்கி அவன் கால்களில் விழுந்தாள். பாலனின் கண்களிலும் நீர் பெருகிற்று. அதில் ஒரு ஆனந்தமும் இருந்தது. திடீரென்று ஒரு சப்தம் அவர்கள் காதை மோதியது.

தொடரும்

வேலங்குடித் திருவிழா வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு!

◉

வேலங்குடித் திருவிழா தொடர்கதைவெளிவந்துள்ள இதழ் கிடைக்கப் பெருதவர்கள், கவலையுற வேண்டியதில்லை! தொடர் கதை வெளியான பகுதி மட்டும் பிரசுரித்து வைத்துள்ளோம். வேண்டியவர்கள் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

— நிர்வாகி

குலோ : (ஆத்திரமாக) அம்பிகாபதி! அடக்கு நாவை!

கூத் : சிற்றின்பச் சேற்றில் புரளும் இவனுக்குச் சீரான அறிவு எங்கிருந்து வரும்?

அம் : (அலட்சியமாக) பேரின்ப வீட்டிலேயே பிறந்து வளர்ந்த பெரியவர் இவர்!

குலோ : போதும்! தீர்ப்புக்கு முன்னாலே விசாரணை என்பது தீயவர்களுக்கும் கொடுக்கப்படும் சலுகை! நீ அதைப் பெறக்கூட அருகதையற்றவன் என்பது உன் பேச்சிலே தெரிகிறது! இனி விசாரணையில்லை!
(கூத்தனைப் பார்த்து)
கண்டீரோ காணம்பி காபதிசெய் யும்பிழையைக்
கண்டீரோ நம்மீதிற் கள்ளமில்லை—உண்டோகாண்
ஆற்றுது கோப மடங்க விவனையொட்டக்
கூத்தாவென் செய்திடலாங் கூறு.

கூத் : (பதிலாக)
பனிப்பகையோன் மாமரபின் பார்த்திபனே சோழா
உனக்கினியான் சொல்லுவ தொன்றுண்டோ—கனத்த
பிழைசெய்தா னன்னைக்குப் பின்பார்க்க வேண்டாம்
கழுவினிலே ஏற்றிவிடல் காண்!

[பெருங்குடி வணிகர் முத்தரசப்பர் எழுகிறார்.]

முத்த :
கூத்தனே நீதி? கொலைவாளோ நீதியவை?
ஆத்திரமேன் மன்னு அமைதிபெறு—

ஆய்தேவி :
—தீத்திறம்போல்
ஆயாத தீர்ப்பும் அறிவாராய் புன்மொழியும்
பாயாமல் வார்த்தை பகர்.

கம் : (எழுந்து) மன்னவனே சோழா! குற்றவாளியைப் பெற்றவன் ஒரு வார்த்தை கேட்கிறேன்! மனமிரங்குவாயா?

குலோ : இரக்கத்தைத் தவிர வேறு எதாயினும் கேளுங்கள்!

கம் : சோதனை ஒன்று வை! அதில் தோற்றான் அம்பிகாபதி என்றால் நீதி என்று நீ நினைப்பதை நிறைவேற்று! வேதனைப்படமாட்டேன் நான்!

குலோ : என்ன சோதனை? எதைப்பற்றி? எந்த முறையில்?

வாணி : தீப்பந்தம் பிடித்து ஆடட்டும்!

கூத் : சிங்கத்தோடு சண்டையிடட்டும்!

வாணி : காளையைப் பிடித்து நிறுத்தட்டும்!

கூத் : கத்தி முனையில் நின்று ஆடிக் காட்டட்டும்!

முத்தரசப்பர் : (எழுந்து) இது மற்போர் வீரர்களுக்கு வைக்க வேண்டிய சோதனை. அம்பிகாபதி வீரனல்ல, கவிஞன்!

அரும்பாக்கத்து அருணிலை விசாகர் : (எழுந்து) இதே சோதனைகளில் ஏதேனும் ஒன்றில் கூத்தரோ, வாணியன் தாதரோ இறங்குவார்களா?

கூத் : நாங்கள் குற்றம் புரிந்தவர்களல்ல!

அரும் : (அலட்சியமாக) புரிந்திருந்தால் துணிந்திருப்பீர்களோ?

(இலக்கியக்கழக அமைச்சர் பவணந்தி எழுந்து)

பவ : விவாதம் போதும்! குலோத்துங்கா! நான் ஒன்று சொல்லுவேன், கேட்பாயா?

குலோ : நீங்களோ, மோனமாகவியோ எது சொன்னாலும், அது வழக்கிற்குப் புறம்பாக இல்லாமலிருந்தால் ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்!

பவ : கவிதைத் துறையில் ஏதேனும் சோதனை வை!

குலோ : நல்லது! எப்படிச் சோதிக்கலாம் கூத்தரே!

கூத் : பேரின்பப் பாடல்களாக அரசவையில் நூறு பாடல்கள் பாடவேண்டும் அம்பிகாபதி! அதில், ஒரு பாடலில் ஒரு சிறு துளி சிற்றின்பக் கருத்துக் கலந்தாலும், அம்பிகாபதியின் தலை யானைக்காலில் இடறப்படும்,

அம் : நல்லது! நானும் தயார்!

குலோ : நாளையே இந்தச் சோதனை! அவை கலையலாம்! அமராவதியை விடுதலை செய்யுங்கள்! அம்பிகாபதியைச் சிறையில் வையுங்கள்!

[இப்போது ஏகம்பவாணர் பதறியபடியே அவைக்குள் ஓடி வருகிறார். அம்பிகாபதியைக் கட்டிக்கொள்கிறார். குலோத்துங்கன் பார்த்தும், பார்க்காதவன்போல் சென்றுவிடுகிறான். கூத்தன் சிரித்து வாணியன்தாதனின் தோளில் தட்டுகிறான். அமராவதி அம்பிகாபதியின் காலில் விழுந்து அழுகிறாள். அம்பிகாபதி இழுத்துச் செல்லப்படுகிறான். புகழேந்தி கம்பனை அணைத்தவாறு கொண்டு செல்கிறான். அவை, பேசியவண்ணம், கலைகிறது.]

— காட்சி முடிவு —

- அடுத்த இதழில் முடியும் -

வெண்பாப் போட்டி 18.

ஈற்றடி :

நெஞ்சமே அஞ்சாதே நீ.

முடிவு தேதி 22-10-55.

முகவரி :—
வெண்பாப் போட்டி
தென்றல்,
சென்னை-6

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் திருக்குறள் உரை

◉

துடித்தீர்கள்! படிக்கப்போகிறீர்கள்!

◉

இலக்கியத்தின் கீர்த்தி கூறும் இன்பத் 'தென்ற'லிலே இந்நாட்டுக் கவிஞன் - தென்னாட்டு மக்கள் கவிஞன் தரும் திராவிடர் இலக்கியத்தைச் சுவைக்கப் போகிறீர்கள்.

புதுவைக்குயில் - புரட்சிக்குயில் - பாரதிதாசன் எம். எல். ஏ. அவர்களின் குறள் ஆராய்ச்சி சிறு சிறு துளிகளாகத் தென்றலில் வெளி வரப் போகிறது.

தென்றல் :: சென்னை-6.

★ ★ ★ ★ ★

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் M.L.A. அவர்கள் 30—9—55 அன்று 'தென்றல்' அலுவலகத்திற்கு வந்த காலை தெரிவித்த செய்தி இது

இராமன் கடவுளா?

—பாரதிதாசன்—

மாயமான் தன்னைப் பொய்மான்
எனஅறி யாது அரக்கன்
மாயையில் அகப்பட் டுத்தன்
மனைவியை இழந்தான் தன்னை
மாயைக்குக் கர்த்தா என்பை
மதிகெட்டு அங்கவனைக் கொன்று
நாயனார் தமைப்பூசித்தான்
கொலைப்பழி நணுகிடாமே!



என்பது சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் ஒன்றாகிய சிவஞான சித்தியார், பரபக்கத்தில் சவுத்திராந்திக மதமாண்பாக அருள்நந்தி சிவாச்சாரியார் அவர்களால் அருளிச் செய்யப்பட்டது. இதன் கருத்து என்ன என்பது ஊன்றிக் கவனிக்கப்படவேண்டும். சவுத்திராந்திக மென்பது வைணவ மதக் கிளை. அந்த சவுத்திராந்திக மதத்தவனை நோக்கி, அருள் நந்தியார் கேட்கிறார்.

" ஏ சௌத்திராந்தகனாகிய வைணவனே! மாரீசனாகிய மாய மானைப் பொய்மான் என்று அறிந்து கொள்ள முடியாமல் அவனுடைய வஞ்சகத்தில் அகப்பட்டு, தன்னுடைய அருமை மனைவியாகிய சீதையைப் பறிகொடுத்த இராமனை 'நீ' எல்லாம் வல்ல கடவுளென்று சோல்லுவாய்! அந்த ராமன் புத்தி கெட்டு, அங்கு இராவணனைக் கொன்று சிவ பெருமானைப் பூசித்தான். ஏனென்றால் அந்த இராவணனைக் கொன்ற பாபமானது தன்னை அணுகாமலிருக்கும் பொருட்டு. இன்னும் இதிலே நாம் கூர்ந்து நோக்கத் தக்கது ஒன்று உண்டு. இராமன், "மதி கெட்டு அங்கவனைக் கொன்றான்" என்று அருள் நந்தி கூறுகிறார்.

இராவணன், தமிழர் தலைவன். ஆரியப் பாதகச் செயலை அறவே ஒழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டவன். அதன் பொருட்டு, தன் வாழ்நாளெல்லாம் அறத்தொண்டு செய்தவன். கொலை வேள்வியை அறவே வெறுத்த கொற்றவேள்! அறங்காத்த அறிவுடை நம்பி! தமிழ் காத்தலைத் தவமெனக் கொண்டவன். உலகில் ஒழுக்கம் ஒன்றே உயர்வு பெற வேண்டும் என்ற உண்மை நோக்கம் உடையவன். அத்தகைய இராவணப் பெருந்தகையைக் கொன்றவன் மதி கெட்டவனாகத் தானே இருக்கவேண்டும்! நான் எதற்கு இதைச் சோல்ல வந்தேனென்றால், இராமனிடத்தில் உள்ள இழி செயல்களை எடுத்துக் காட்டி, அவன் கடவுள் அல்லன்; ஓர் ஒழுக்க மற்ற ஆள் என்பதை, நன்மை கருதி திராவிட அறிஞர்கள் விளக்க வரும்போது சைவர்களும் அதை எதிர்க்கிறார்கள். இப்படி எதிர்ப்பதன் மூலம் தம் சைவ சிந்தாந்த சாத்திரங்களைப் புறக்கணிக்கிறார்கள். காரணம், ஆராய்ச்சி இன்மையா? மறதியா? நாத்திக மனப்பான்மையா? என்று நான் ஒரு சொற்பொழிவின் நடுவில், கேட்டபோது சைவ சிந்தாந்த சாத்திரம் வல்ல அறிஞர் சிலர் முகத்திலும் வியப்பைக் கண்டேன்!

★ ★ ★ ★ ★

தீக்குளிக்கும் போதும் தேம்பாத ராமபிரான்...

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

குக்குக் கூறிய சரியான சமாதான மாகாது.

கம்பனும் இந்த ஐயப்பாட்டிற்குச் சரியான அமைதி காட்டவில்லை. காட்ட முடியவில்லை. இந்தக் கட்டத்திற்கு வந்ததும் அவன் தடுமாறினான். இராவணன் சீதையைத் தோடுவதைக் கம்பனால் சகித்துக் கொள்ளமுடியவில்லை. சீதாபிராட்டியின் திருமேனியை அரக்கன் தீண்டலாமா? கோடிய கைகள் கூந்தலைப் பற்றி இழுப்பதா? என்று நினைத்துப் பார்க்கும்போது வைணவ பக்தனான கம்பனால் எப்படிப் போறுக்க முடியும்! அவற்றிற்கு ஏதாவது அமைதி காணக் கம்பன் முதலில் முயன்றிருக்கத்தான் வேண்டும். அமைதி காண முடியாத காரணத்தால் அவன் கதையையே திருத்திக் கோள்ள முற்பட்டான்.

தலைப்பாகைக்கு ஏற்பத் தலையைத் திருத்திக் கோண்டான்.

இராவணன் தன்னுடைய தோள் வலிமையால் சீதையை நிலத்தோடு பேயர்த்துக் கோண்டு போயினான் எனக் கம்பன் எழுதினான்.

சீதையின் கற்புக்கு எந்தப்பகுதி மாசு தரக்கூடும் என்று கம்பன் நினைத்தானே அந்தப் பகுதியைத் தன் இராம காதையில் களைந்துவிட விரும்பினான். அவ்வாறு விரும்பி மூலக்கதையில் திருத்தம் செய்த கம்பன் இந்த மாற்றத்தைப் பல இடங்களிலும் விடாது நினைவுபடுத்தி வலியுறுத்தினான், கோஞ்சமும் இழை விட்டுக் காட்டக் கூடாது என்ற நினைப்போடு பன்னிப் பன்னி அதைப் பேசினான்.

[அவ் அணங்கினை - சீதையை; அஞ்சல் என - அஞ்ச வேண்டாம் என்று கூறி; தீண்டுற்றிலன் - இராவணன் சீதையின் தூய உடலைத் தீண்டி மாசு படுத்தவில்லை; மூண்டுற்று எழும் வெங்கதம் உற்றிலனால் - மூண்டெழுந்த கோபம் தணியப் பெற்றவனாய்]

இராம இலக்குமணர்களைக் கண்டதும் இறக்கும் தறுவாயில் கிடக்கும் சடாயுவுக்குச் சிறிது உணர்வு துளிர்க்கிறது. இருவரையும் கண் திறந்து பார்க்கிறான். சீதைக்கு நேர்ந்த இழிவை அவர்களுக்குத் தெரியப்படுத்த வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்கிறான் இழந்தசிறகுகளும் நீங்கும் உயிரும் மீளப் பெற்றது போல் பொலிவெய்துகிறான். கடந்த செய்தியை அவர்கட்கு சடாயு கூறுகிறான்.

வடுக்கண்வார் கூந்த லாளை
இராவணன் மண்ணி னோடும்
எடுத்தனன் ஏகுவானை எதிர்ந்
தெனது ஆற்றல் கொண்டு
தடுத்தனென் ஆவ தெல்லாம்
தவத்தரன் தத்த வாளால்

பதுகைகளும் பத்துத் தலைகளும் அறுந்து சிந்திச் சிதறுவதைக் கண்டு சிரிக்கப் போகின்றீர்கள்" என்று பலவாறாகப் புலம்புகிறாள்.

முந்தீஞ் சுனைகாள்
முழைவாழ் அரிகாள்
இந்தந் நிலனொடும்
எடுத்த கைந்நால்
ஐந்தும் தலைபத்தும்
மலைந்துலையச்
சிந்தும்படி கண்டு சிரித்திடுவீர்.
[சு. உ. ப. 81]

[முந்தும் சுனைகாள்: என் எதிர்ப்படும் மலைச் சுனைகளே, முழைவாழ் அரிகாள்: குகைகளில் வாழும் சிங்கங்களே]

இவ்விடத்திலும் கம்பன், இராவணன் தரையோடு பெயர்த்த செய்தியை விடாது பெய்துவைப்பதைக் காணலாம்.

சீதையின் வாயிலாக அதைச் சொல்லுகிறான். சடாயுவின் வாயிலாகச் சொல்லுகிறான். இப்படிக் கம்பன் தானும் கூறித், தன் கதாபாத்திரங்களையும் விடாது கூற வைக்கிறான்.

கம்பன் தான் செய்து கொண்ட

ஆண்டு - அப்பொழுது; ஆயிடை அவ்விடத்தே; தீண்டேல் எனும் உரை - 'விரும்பாத பிறமகளிரை வலியத் தீண்டின் தலை சிதறி இறக்கக் கடவை' என்ற சாபம்; சிந்தை செயா-மனத்தில் நினைத்து; கீண்டான் நிலம் - நிலத்தைப் பெயர்த்தெடுத்தான்.

சீதையைத் தூக்கிப் போக விரைந்து நெருங்கினான் இராவணன். தொடப் போனான்; ஆனால் தொடவில்லை. முன் தனக்குள்ள சாபம் இடை மறித்தது. சற்றுப்பின் வாங்கினான். ஆனால் முயற்சி முன்னேறியது. தன் தோளை நோக்கித் தோளின் திறம் நோக்கிச் சீதையிருந்த நிலம் நோக்கினான். அப்படியே நிலத்தைப் பெயர்த்தெடுத் தூக்கொண்டு 'கும்' மென்று மேலே கிளம்பினான்.

தீண்டேல் எனும் அவ்வுரை யாது அது வந்தவாறு எங்ஙனம்? அது வான்மீகி ராமாயணத்தில் யுத்த காண்டத்துள் பன்னிரண்டாவது சருக்கத்தில் காணப்படுகிறது.

இராவணன் தன் அமைச்சவையைக் கூட்டி, "இராமனும் இலக்குவனும் வானரப் படையுடன் கடற் கரையில் வந்து இறங்கி விட்டனர். அவர்கள் வாழ்வுக்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும். என்னவாயினும் சீதையை மட்டும் திருப்பிக் கொடுத்துவிடக் கூடாது. அதற்கு என்ன யோசனை கூறுகிறீர்கள்" என்று கேட்டான். அங்கே இருந்த கும்பகர்ணனுக்கு அண்ணன் மேல் சிறு கசப்பு ஏற்பட்டது. இந்த யோசனையை அண்ணன் சிறிது

"என்?" என்று கேட்டதற்கு "ஊர்காண" என்றானும்!

இராவணன் சீதையைக் கவர்ந்து கோண்டு விண்வழி விரைந்து சேன்றான். அப்போழுது சடாயு எதிர்ப்பட்டான். அஞ்சி மயங்கிய சீதையை அஞ்சவேண்டாம் எனக் கூறினான்; சடாயு. இராவணன் சீதையைக் கவர்ந்து சேல்லுகின்றானே என்று நினைக்க நினைக்க சடாயுவுக்குச் சினம் போங்கி எழுந்தது. ஆனால் அவ்வாறு எழுந்த கோபம் மேலும் மேலும் போங்கி வளர வேண்டியது தானே முறை! அப்படியிருக்க அச்சினம் சிறிது சிறிதாகத் தணிந்து விடுகிறது?

அது ஏன் தெரியுமா?

அதில்தான் 'கம்பசித்திரம்' அடங்கியிருக்கிறது. தான் புதிதாக மாற்றியதை அவ்விடத்தில் உறுதி செய்கிறான் கம்பன். சீதையை இராவணப் பயல் தீண்டவில்லை அதனால்தான் சடாயுவின் கோபம் படிப்படியாகத் குறைந்து விடுகிறது. கோபம் தணிந்ததால் இராவணனுடன் உரையாடலை விரும்பி சடாயு மேற் கோண்டானும்.

ஆண்டுற்று அவ் அணங்கினை
அஞ்சல் எனாத்
தீண்டுற்றிலன் என்றுணர்
சிந்தையினான்
மூண்டுற்று எழும் வெங்கதம்
உற்றிலனால்
மீண்டுற்று உரையாடலை
மேவினனால்.
— [ஆரண்ய காண்டம்]

படுத்தனன் இங்கு வீழ்ந்தேன்
இதுவின்று பட்டதென்றான்.
[சடாயு உயிர் நீத்த படலம்]

வடுப் போன்ற கண்களையும் நீண்ட கூந்தலையும் உடைய சீதையை இராவணன் மண்ணோடு பெயர்த்துஎடுத்துக்கொண்டு செல்ல அது கண்டு என் ஆற்றல் முழுமையும் கொண்டு எதிர்த்தேன். ஆனால் சிவனார் கொடுத்த வாளால் என்னை வெட்டி வீழ்த்தினன். வீழ்த்தலும் இங்கு வீழ்ந்தேன். இதுவே இன்று நடந்ததாகும் என்று சடாயு கூறினான்.

'இராவணன் மண்ணினோடும் எடுத்தனன் ஏகுவானை' என்ற சொற்றொடர் கம்பனின் நகாசு வேலையைச் சேர்ந்ததாகும்.

இராவணன் தூக்கிக்கொண்டு போகும் போது சீதை பல பொருள்களையும் நோக்கிக் கதறுகிறாள். 'மலையே மரமே குயிலே நீங்களெல்லோரும் இராமனிடம் இவ்வலச் செய்தியைக் கூற மாட்டீர்களா? சுனைகளே குகைகளில் வாழும் சிங்கங்களே! இந்தத் தரையோடு பெயர்த்தெடுத்த இரு

மாற்றத்திற்குத் தானே காரணம் கற்பித்துக் கொண்டானா? அல்லது வான்மீகி ராமாயணத்திலிருந்தே கண்டெடுத்துக் கொண்டானா? என்று காணல் வேண்டும்.

மண்ணொடு இராவணன் பெயர்த்து எடுத்துக்கொண்டான் என்பதற்கு இராவணனின் தூண் தான் என்னும்படியான தோளின் வலிமையைக் கம்பன் துணையாக்கிக் கொண்டான். என் சீதையை இராவணன் தொட்டுத் தூக்க வில்லை என்பதற்கு இராவணனுக்குள்ள சாபம் ஒன்றினைக் காரணமாகக் கொண்டான். அச்சாபமும் வான்மீகி இராமயணத்திலேயே காணப்படுவதாகும் வான்மீகி அறிந்திருப்பாரோ இல்லையோ அச்சாபம் இராவணன் வாயிலிருந்தே வெளி வருகிறது.

ஆண்டு ஆயிடைத்
தீயவன்
ஆயிழையைத்
தீண்டேல் எனும்
உரை சிந்தை
செயாத்
தூண்தான் எனலாம் உயர்
தோள் வலியால்
கீண்டான் நிலம் யோசனை
கீழொடுமேல்.

காலத்திற்கு முன்னமே என் கேட்டிருக்கக் கூடாது. தலைக்கு மேல் வெள்ளம் வரும்போதா அணை கட்டத் திட்டம் போடுவது? இராவணனைப் பார்த்து அவன், "அண்ணா நீ எங்களுடன் கலந்து முடிவு செய்த பின்னரே சீதையைக் கவர்ந்து வந்திருக்க வேண்டும். அப்பொழுது செய்ய வேண்டியதை இப்பொழுது செய்ய நினைக்கிறாய். முந்திச் செய்ய வேண்டியவற்றைப் பிந்திச் செய்வதும் பிந்திச்செய்ய வேண்டியவற்றை முந்திச் செய்வதும் நீதி தெரியாதவனின் செயல்களாகும். சீதையைக் கவர்ந்து வரு முன் எங்களுடன் கலந்திருந்தால் இன்று யமுனை ஆறு யமுனா பர்வதத்தை விட்டுப் பிரியாதது போலச் சீதையின் உள்ளம் உன் வயப்பட்டிருக்கும். முதலில் இராமனைக் கொன்ற பிறகே சீதையைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அதுதான் அரசியல் நெறி." என்று கூறுகிறான்.

இராவணனுக்குக் கும்பகர்ணனின் உரை சுவைபடவில்லை. ஏனெனில் அது அந்தச் சமயத்துக்கு உடனடியான தேவையை நிறைவேற்றுவதாக இல்லை. மேற்கொண்டு செயல் நடத்துதற்கு வழிதுறை வகுக்காமையால் இராவணன் கும்பகர்ணன் மேல் சினக்கிறான், சீறுகிறான்.

அடுத்த இதழில் முடியும்

ஐயோ! உத்தாவாதமில்லையே சீதையின் கற்புக்கு!

வாழ்வது எப்படியோ?

(9)

தென்னாட்டைக் காலடியிலே போட்டுக்கொண்டு, 'ஏக இந்தியா' என்ற ஏமாற்றுச் சொல்லின் பெயரால் வடநாடு மட்டும் எவ்வாறு பணத்தோட்டமாக்கப் பட்டு வருகிறது என்பதற்கு, அங்கே நிறுவப்பட்டுள்ள பாங்கிகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள், ஆலைகள், இவைகளைச் சான்று காட்டினார். இந்த இதழில் உற்பத்தித் தொழிற்சாலைகள் பற்றி ஆராய்கிறார் சொற்செல்வர்

ஈ.வே.கி.சம்பத்

இந்தியத்துணைக் கண்டத்தில் முதன்மையான தொழிலாக பஞ்சாலைத் தொழில் விளங்குகிறது. அதற்கடுத்த இடத்தை வகிப்பது சர்க்கரை உற்பத்தித் தொழிலாகும்.

சர்க்கரை உற்பத்தித் தொழில், 70 கோடி ரூபாய்கள் வரை மூலதனம் இடப்பட்டு இயங்கி வருகிறது. இத்தொழிலில் 2 கோடி விவசாயிகள் தொடர்பு கொண்டுள்ளனர். இத்தொழில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 867 தொழிலாளர்களுக்கு வேலைதருகிறது. மூவாயிரம் நிபுணர்களையும் இத்தொழில் ஈர்த்துக் கொண்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 100 கோடி ரூபாய்கள் பெறுமானமுள்ள சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது.

ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்னர், பலநாடுகளுக்கு இந்தியத்துணைக் கண்டத்துச் சர்க்கரை ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது. கடந்த நூறு ஆண்டுகளில் க்யூபா, ஹவாய், ஜாவா மாரீஸ் தீவு, பிலிப்பைன் தீவுகள் ஆகிய நாட்டினர் ஏராளமாகக் கரும்பு பயிரிடத் தொடங்கவே சர்க்கரை உற்பத்தியில் இந்தியத் துணைக் கண்டத்தின் ஏகபோகத்துக்கு ஆபத்து வந்துவிட்டது. இருப்பினும் சர்க்கரைத் தொழில் மேலும் பெருகுவதற்குரிய வாய்ப்புகள் தென்படத்தான் செய்கின்றன.

இந்தத் தொழிலிலும் திராவிடம் பின்தங்கிய நாடாகவே காட்சியளிக்கிறது. இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் உள்ள சர்க்கரை ஆலைகள் ஆண்டொன்றுக்கு பத்து லட்சத்து ஐம்பத்தி நாலாயிரம் டன் சர்க்கரையை உற்பத்தி செய்கின்றனர். இதில், பத்து லட்சத்து பதினைந்தாயிரம் டன் சர்க்கரையை உத்திரப் பிரதேசத்திலும், பீஹாரிலும் உள்ள ஆலைகள் மட்டும் உற்பத்தி செய்கின்றன. மிகுதியுள்ள 39 ஆயிரம் டன் சர்க்கரையைத் தான் மற்ற ஆலைகள் அனைத்தும் சேர்ந்து உற்பத்தி செய்கின்றன. இதில் திராவிடத்தின் பங்கு எவ்வளவு இருக்கும் என்பது தெள்ளென விளங்குகிறது. இந்தியத்துணைக் கண்டம் முழுமையும் 167 ஆலைகள் உள்ளன. அவைகளில் சென்னை, ஆந்திரம் ஆகிய பகுதிகளில் 18 ஆலைகளே உள்ளன.

பருத்தியைப் போலவே, தென்னாட்டு உழவு தா[illegible] தரத்திலும், எடையிலும் மிகுந்த கரும்பை அதிகமாக உற்பத்தி செய்கிறது. ஆனால் கரும்பை அடிப்படையாகக் கொண்டுள்ள தொழில் வளம் வடநாட்டில் தான் பெருகி நிற்கிறது.

திராவிடம் மூலப் பொருள்களை உற்பத்தி செய்யும் வெறும் விவசாய நாடாகவும், மூலப்பொருள் உற்பத்தியில் பின்னடைந்திருப்பினும், தொழில் வளத்தில் மிக்கதோர் நாடாகவும் விளங்குகின்றது என்னும் கூற்றுக்கு, சர்க்கரை உற்பத்தித் துறையும் மற்றொரு சான்றாக உள்ளது.

சர்க்கரை உற்பத்திக் கடுத்தாற்போல், நமது கவனத்திற்கு வருவது சிமெண்ட் உற்பத்தியாகும். சிமெண்ட் உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனம் மொத்தம் 32 கோடி ரூபாய்களாகும். இதில் தென்னாட்டவரின் மூலதனம் (தென்னாட்டவர்களால் நடத்தப்படும் சிமெண்ட் ஆலைகளில் போடப்பட்டுள்ள மூலதனம்) 1 கோடியே 51 லட்சத்து 47 ஆயிரத்து 355 ரூபாய்களாகும். இந்தத் தொகைபோக, 32 கோடி ரூபாயில் எஞ்சியுள்ளதில் அஸோஸியேட்டட் சிமெண்ட் கம்பனி (எ. சி. சி.) என்னும் வடவர் ஆதிக்கத்தில் உள்ள ஸ்தாபனத்தின் மூலதனம் மட்டும் 15 கோடி ரூபாய்களாகும். அடுத்து டால்மியா குரூப் என்றழைக்கப்படும் டால்மியாவின் ஆதிக்கத்தில் உள்ள சிமெண்ட் கம்பெனிகளின் மூலதனம் மட்டும் ரூபாய் 7 கோடி ஆகும்.

அடுத்தாற்போல் வனஸ்பதி நெய் உற்பத்தி செய்யும் தொழில் கடந்த இருபது ஆண்டுகளில் பெரும் வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. 1935-ல் இரண்டே இரண்டு வனஸ்பதித் தொழிற்சாலைகள் மட்டுமே இருந்தன. 1939-ல் 10 ஆகவும், 1945-ல் 19 ஆகவும், 1950-ல் 46 ஆகவும், தற்போது 49 ஆகவும், தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது.

மொத்தம் 49 வனஸ்பதித் தொழிற்சாலைகளில் தென்னாட்டில் இடம் பெற்றுள்ளவை (சென்னை, ஆந்திரம், ஹைதராபாத், மைசூர், திரு-கொச்சி) 13 தொழிற்சாலைகள் ஆகும். இந்தப் பதிமூன்று தொழிற்சாலைகளில் சிலவற்றில் வடநாட்டவர் மூலதனமும், நிர்வாகமும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. 49 தொழிற்சாலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனம் ஏறத்தாழ 25 கோடி ரூபாய்களாகும். இதில், ஏறத்தாழ 1 கோடியே 35 லட்சம் ரூபாய்கள் வரை தென்னாட்டுத் தொழிற்சாலைகளின் மூலதனமாகும். எஞ்சியுள்ளவை அனைத்தும் வடநாட்டில், வடவருடையது.

ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார ஆற்றல் அந்நாடு உற்பத்தி செய்யும் எஃகைக் [Steel] கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது என்றால் அது மிகையாகாது.

தென்னாட்டில், மைசூரில் சிறிய அளவில் இரும்புத் தொழிற்சாலை ஒன்று உள்ளது. அதில் இடப்பட்டுள்ள மூலதனம் 5 கோடியே 20 இலட்சம் ரூபாய்களாகும். மற்றபடி மிகப் பெரிய இரும்பு எஃகுத் தொழிற்சாலை பீஹாரில் ஷாம்ஷெட்பூரில் அமைந்துள்ளது. அதன் உரிமையாளர் டாடா என்பவர். அதன் மூலதனம் 41கோடியே 40 லட்சம் ரூபாய்கள். ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 7 லட்சத்து 50 ஆயிரம் டன் எஃகு உற்பத்தி செய்யப்படுகிறது.

இரும்பு உற்பத்தியில் (**Pig Iron**) தி இண்டியன் அயர்ன் ஸ்டீல் கம்பனி என்னும் வடநாட்டு நிறுவனம் வடநாட்டில் பல இடங்களில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி உள்ளது. இந்தக் கம்பெனியின் மூலதனம் 14 கோடியே 40 லட்சம் ரூபாய்கள்.

அடுத்து இந்தியத்துணைக்கண்ட முழுமையும் எஃகுக் கம்பிகளை உற்பத்தி செய்யும் ரோலிங்மில்கள் (**Steel Re-rolling Mills**) மொத்தம் 92 ஆலைகள் உள்ளன. இவைகளனைத்தும் வட நாட்டவரின் ஆதிக்கத்தில் முழுக்க முழுக்க உள்ளன. இவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனம் ஏறத்தாழ 61 கோடி ரூபாய்களாகும்.

இனி இரும்பையும் எஃகையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டுள்ள எஞ்சினியரிங் தொழிற்சாலைகளின் விபரங்களைக் காணுவோம்,

வடநாட்டில் உள்ள என்சினீயரிங் தொழிற்சாலைகள்

பெயர்.	மூலதனம்.	உற்பத்தி செய்யும் பொருள்கள்.
1. அக்மி Mfg. Co.	12,40,000	போல்ட்டுகள், ஷீல்கள், மின்சார விசிறிகள்.
2. அல்கராக் ஏஷ்டவுன் Co.	33,42,000	பெரும் நீராவி ஓடங்கள், துறைமுகப் பொருள்கள் (Tug and Barge) முதலியவை.
3. ஆர்த்தர் பட்லர் & Co.	7,30,000	மோட்டார் வாகனத் துணைப் பொருள்கள். இயந்திர சாதன மராமத்துகள்.
4. பர்கார் எஞ்சினீயரிங் & பவுண்டரி ஒர்க்ஸ்.	1,29,515	இரும்பு அச்சு வார்ப்படம், இயந்திர மராமத்துகள்.
5. பாரதீய எலக்ட்ரிக் ஸ்டீல் Co.	37,50,000	இரயில்வேயின் எஃகுத் தேவைகள் அனைத்தும்.

பெயர்.	மூலதனம்.	நடைபெறும் தொழில்.
6. பிராடி எஞ்சினீயரிங் Co.	14,99,960	வார்ப்படம், பொது பொறியியல் தொழில்கள்.
7. பிரெயித்வெயிட் & Co.	39,61,853	பாலங்கள், கட்டிடங்கள் பற்றிய பொறியியல்.
8. பிரிட்ஜ் & ரூப் Co.	12,00,000	பாலங்கள், கட்டிடங்கள் பற்றிய பொறியியல்.
9. பிரிட்டானியா பில்டிங் & அயர்ன் Co.	10,00,000	கட்டிடப் பொறியியல்.
10. பிரிட்டிஷ் இண்டியா கன்ஸ்ட்ரக்ஷன் Co.	5,00,000	மின்சார L.T. & H.T. சுவிட்ச் கியர்கள், தேயிலை இயந்திரங்கள், பம்புகள், கார்பன் புஷ்கள் இதர மின்சார சாமான்கள் முதலியவை.
11. பர்ன் அண்டு Co.	70,00,000	பாலங்கள், இரும்புக் கப்பல்கள், தோணிகள், இரும்பு பித்தளை வார்ப்படங்கள்.
12. கூப்பர் எஞ்சினீயரிங்.	25,20,000	இயந்திரப் பொறியியல், வார்ப்படம், டீசல் இயந்திர உற்பத்தி, மெஷின் டூல்ஸ், பஞ்சாலை, விவசாய, சர்க்கரை, இயந்திரங்கள் உற்பத்தி.
13. G. G. தண்டேகார் மெஷின் ஒர்க்ஸ்.	7,46,875	பொது பொறியியல், வார்ப்படம், மாவு 'அண்டு' அரிசி மில் இயந்திரங்கள், ஏக்ஸ்பெல்லர்கள் உற்பத்தி.

வெண்பாப் போட்டி

16. கற்பழித்துப் போன கடவுளெலாம் உங்களிடம்
இப்பொழுது வந்தே இடங்கேட்டால்—

(இரட்டைப் புலவர் முறை)

வெண்பாப் போட்டி 16ன் பரிசுபெற்ற வெண்பாவையும் ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் சென்ற இதழில் வெளியிட்டோம். இந்த இதழில் மற்றொரு வெண்பாவிற்கும் பரிசு கொடுத்துள்ளோம் : பிரசுரத்திற்குத் தகுதியுடைய ஏனைய வெண்பாக்கள் சிலவற்றையும் வெளியிட்டுள்ளோம்.

◉ கற்பழித்துப் போன கடவுளெலாம் உங்களிடம்
இப்பொழுது வந்தே இடங்கேட்டால்--அற்பரது
சிலம் சிறக்கிருந்தால் செந்தமிழர் ஏற்றிட்டால்
வாழ வகுப்பேன் வழி.

—கி. கண்ணன், அகரப்பேட்டை.

★

--முப்பொழுதும்
வென்றவனை வென்று விருதுகள் சூடிப்பின்
கொன்றவனை ஆடிடுவேன் கூத்து.

—கோ. நம்மாழ்வார், இளங்காடு.

★

--அப்பொழுதே
முச்சந்தி தன்னில் முறையாய் நிறுத்திவைத்
தெச்சில் உமிழ்வோம் இனி.

—தமிழ்நெஞ்சன், கரந்தை.

★

--கற்பனைக்கும்
எட்டாத நூந்தம் இழிசெயல்கள் போற்றிடயான்
முட்டாளோ என்பேன் முனிந்து.

—அ. செல்லப்பன், புதுவை.

★

--அன்னவரை
காட்சிப் பொருளாக்கி கண்டோர் பரிகசிக்கக்
கேட்டின்ப மெய்திடுவேன் காண் !

—ஜே. எஸ். கலியாணசுந்தரம், நெடும்பலம்.

★

--செப்பிடுவோம்
ஆரிய இல்லம் அடுத்துளது அங்குமக்கு
சேரிழையார் மீதிருப்பர் என்று.

—வி, பாலசுந்தரம், அருப்புக்கோட்டை.

★

--கற்பித்த
கன்னித் தமிழேட்டின் சொல்லெடுத்துக் கல்லாக்கி
எண்ணி அடிப்பேன் இன்று.

—ஆர். வி. எம். சாமி, மதுரை.

★

--நற்றமிழா !
பெற்றதிரு நாடு பெருமையாய் வாழ்ந்திட நீ
சிற்றிடமும் இல்லெனச் செப்பு.

—க. சி. கதாதாசன், கண்டர்கோட்டை.

★

--செப்பிடுவோம்
பக்குவமாய் மக்களின்று பண்பாடு பெற்றுவிட்டார்
இக்கணம் ஏகிடுவீ ரென்று !

—பழ. ஆவிடையப்பன், பட்டுக்கோட்டை.

★

--கற்பகமே !
இப்புவியில் அன்னவர்க்கு ஏற்றயிடம் கீழ்ப்பாக்கத்(து)
ஒப்பிலா மாளிகையி லுண்டு.

—வெ. வெங்கடசாமி, பாலையம்பட்டி.

--செப்பிடுவோம்
போனபுற நானூற்றுப் பொற்காலம் வந்துளது
ஆணவத்தால் சாகா தகல்.

—சோ. பாலகிருட்டிணன், காரைக்குடி.

★

--கற்பொழுக்கம்
தேடக் கிடைக்காத தேவ ருலகிற்கே
ஓடச்செய் வோமென் றுணர்.

—கு. இரமாதேவி, சென்னை-1.

★

--அற்பர்களின்
காதை அறுத்துக் கையில் கொடுத்திடுவாள்
பேதையல்ல தென்னாட்டுப் பெண் !

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

★

--அற்பர்களை
கூறுபட வெட்டிக் கொலைசெய்வ தல்லாமல்
வேறுவழி உண்டோ விளம்பு.

—ஜி. என். இலட்சுமணன், சேலம்.

★

--அப்பொழுதே
போர்த்தடங்கை வாள்தேட புண்ணுமிழ்நீர் விண்காட்ட
மார்பில் உதைப்பேன் மகிழ்ந்து.

—கா. கந்தசாமி, கரிச்சிபாளையம்.

★

--அப்பாகேள் !
தேரோடு வீதியிலே தீயவராம் அன்னவரை
வேரோடு தீவை விரைந்து.

—து. திருநாவுக்கரசு, அரியநாச்சி.

★

--தப்பார்கள்
அம்மையர்தாம் ஏந்தும் அலகிட்ட சாமரத்தால்
செம்மையாய் சாடிடுவர் செப்பு.

—க. ராமசாமி, பொறையார்.

★

--தப்பாது
வெட்டி யவர்தலையை வீணருக்கோர் பாடமாக
கட்டிவைப்பேன் நண்தெருவில் காண்.

—ஆசிரியர் சவ்வாது, கயற்கண்ணிபுரம்.

★

--விற்பனர்காள் !
கண்காட்சி சாலையொன்று கட்டிவைத்து அன்னவரை
முன்காட்டு வீர்மக்கள் முன்.

—'பாவாணன்', பொள்ளாச்சி.

★

--சொற்கேள்
பருந்துக் கிரையிடுவேன் பார்சிரிக்க வீணர்
ஒருங்கே வரப்பெறினும் ஓர்ந்து.

—க. வீ. குருசாமி, சென்னை-12.

★

--முத்தமிழும்
கல்லறமும் கொஞ்சிடும் நெஞ்சிடத்தில் பித்தரேன்
புல்லரேன் என்போம் புகைந்து.

—இசைச்செல்வன், அம்பத்தூர்.

★

--அற்பர்தம்
தேகத்தைத் துண்டாகச் சேதித்து வீதியுள்ள
காகம் தினக்கொடுப்பேன் காண்.

—அமரன், காமாட்சிபுரம்.

★

--அற்பர்காள்
அற்றிடுவீர் இந்நாட்டின் அப்புறமே யென்று
அடித்துத் துரத்திடுவோம் ஆர்த்து.

—ப. அருளானந்தம், குமாரசாமிபேட்டை.

★

--அற்றிடவே
நாட்டின் நடுத்தெருவில் நன்றாகப் போட்டுடைத்து
கேட்டை விளக்கிடுவேன் கேள்.

—இரா. இளங்கவி, கண்டர்கோட்டை.

★

--சுட்டிடுவீர்
புத்துணர்வு தோன்றி புரட்சிமய மாகிவிட்ட
இத்தலத்தில் வந்ததேன் என்று.

—கமலேசுகுமாரி, சென்னை-7.

★

--அப்பனே !
வெற்றிலைத் தட்டேந்தி வீணரைப் போற்றியாம்
குற்றம் புரியவோ கூறு.

—இரா. சண்முகம், பண்ணைக்காடு.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். எ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை 6.